Registered as a Newspaper     பக்கங்கள் 10 விலை: ரூபா 6-00

# ஈழநாதம்

வெள்ளி மஞ்சரி

நாதம் 04   திருவள்ளுவர் ஆண்டு 2024   மார்கழி 23   (07-01-1994)   வெள்ளிக்கிழமை   ஓசை 323

## பாடசாலை மேற்பார்வை அதிகரிக்கத் திட்டம்

யாழ். மாவட்டப் பாடசாலைகள் முதலாம் தவணையில் வலய மட்ட உத்தியோகத்தர்களினாலும் கோட்ட மட்ட உத்தியோகத்தர்களினாலும் மேற்பார்வை செய்யப்படவுள்ளது. இம் மேற்பார்வை நடவடிக்கைகள் அடுத்த கிழமை தொடக்கம் நடைபெற உள்ளதாக யாழ். தெற்குவலய கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். இதன்மூலம் பாடசாலைகள் இவ் ஆண்டில் கற்பித்தலுக்கு ஏற்ற முன்னாயத்தங்களுடன் இருக்கின்றனவா என்பதை (10ஆம் பக்கம் பார்க்க)

# உடவளவ காட்டுப் பகுதியில் மற்றுமொரு மனித புதைகுழி!

## மண்டை ஓடுகள் மீட்பு 40 இருக்கலாம் என தகவல்

(கொழும்பு)

**சிறிலங்காவின் தேசிய வன பரிபாலனத்திற்கு உட்பட்ட உடவளவ பகுதியில் மனிதப் புதைகுழி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதிலிருந்து மனித மண்டை ஓடுகள், எலும்புகள் மற்றும் பாவனைப் பொருள்கள் சில மீட்கப்பட்டுள்ளன. இப் புதைகுழியில் 40 பேர் புதைக்கப்பட்டிருக்கலாம் என தெரிவிக்கப்படுகிறது.**

உடவளவ தேசிய வன பாதுகாப்புப் பகுதியில் பொதுமக்கள் கொடுத்த தகவலையடுத்து அம்பாந்தோட்டை மாவட்ட சுதந்திரக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் மகிந்த ராஜபக்ச, இரத்தினபுரி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார எம்பிலிப்பிட்டிய நீதிபதி பி. ரணசிங்கா ஆகியோர் முன்னிலையில் இப் புதைகுழி தோண்டப்பட் (10 ஆம் பக்கம் பார்க்க)

## பருத்தித்துறை கடற்பரப்பில் பலியான மேலும் இரு மீனவர்களின் சடலங்கள் கரைஒதுங்கின

பருத்தித்துறை சற்கோட்டை கடற்பரப்பில் சிறிலங்கா கடற்படையினரால் கொல்லப்பட்ட மீனவர்களின் சடலங்கள் கரை ஒதுங்கி வருகின்றன.

முனை, கற்கோவளம், கோரியடி கடற்கரைப் பகுதிகளில் நேற்று மாலை 6.00 மணிமுதல் ஒதுங்கிய சடலங்கள் மீட்கப்பட்டுவருகின்றன. மாலை 6 30 மணிவரையில் இரண்டு சடலங்கள் மீட்கப்பட்டன. இவற்றுடன் இதுவரை மொத்தம் 4சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

பலாலியிலிருந்து இடம்பெயர்ந்து சற்கோட்டையில் தங்கிவந்த சின்னப்பொடி-பாலசிங்கம் (வயது40), தியோகுப்பிள்ளை - அன்ரன் ஜேசுதாஸ் (வயது 29) ஆகியோரது சடலங்கள் சூடுபட்டு தலைசிதைந்த நிலையில் மீட்கப்பட்டன. இவர்கள் இருவரும் குடும்பத் தலைவர்கள்

மற்றைய சடலங்கள் மீட்புப் பணிகள் துரிதமடைந்து வருகின்றன. மீட்கப்பட்ட சடலங்கள் அவர்கள் அணிந்திருந்த உடைகளின் நிறங்களைக் கொண்டே குடும்பத்தினரால் அடையாளம் காணப்பட்டன. (யோ)

சூரியகந்த மலைப் பகுதியில்

## ஏழு மண்டை ஓடுகளே மீட்டெடுக்கப்பட்டதாம்

(கொழும்பு)

எம்பிலிப்பிட்டிய பகுதியில் புதைகுழியில் இருந்து எலும்புக் கூடுகள் சில மீட்கப்பட்டது தொடர்பாக தற்பொழுது அரச தரப்பில் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

சூரியகந்த பகுதியில் பெரும் சவக்குழிகள் கண்டுபிடிக்கப்பட்டதாக வெளியான செய்திகளையடுத்து உண்மையை அறிய விசாரணை நடத்த சி. ஐ. டி. பகுதியினர் பணிக்கப்பட்டுள்ளதாக சிறிலங்கா வானொலி தெரிவித்தது. சி. ஐ. டி. பிரதி பொலிஸ் மா அதிபர் அமரசேன ராஜபக்சவை விசாரணையை உடனடியாக ஆரம்பிக்குமாறு பொலிஸ் மா அதிபர் ஏர்னஸ்ட் பெரேரா உத்தரவிட்டுள்ளார்.

சி. ஐ. டி. பகுதி தமது விசாரணை அறிக்கைகளை எம்பிலிப்பிட்டி நீதிபதியிடம் சமர்ப்பிப்பர். இது தொடர்பாக பொலிஸ் மா அதிபர் (10 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் பிரதேசத்திற்கு பிரதேசம் வேறு யுக்திகளை கையாள்கின்றனர்

-சிசில் வைத்தியரெட்னா

(கொழும்பு)

நாம் வெவ்வேறு மூன்று அரங்குகளில் நின்று போரிட வேண்டியுள்ளது. கிழக்குப் பகுதிக் காடுகள், வன்னிக் காடுகள், யாழ். குடாநாடு என இவை மூன்று வித்தியாசமான சூழ்நிலையைக் கொண்டவை இந்த மூன்று பகுதிகளிலிருந்தும் விடுதலைப் புலிகள் வெவ்வேறு தந்திரோபாயங்களைக் கையாள்கிறார்கள். நாமும் அதற்கேற்ப வெவ்வேறு போருபாயங்களை வகுக்க வேண்டும்

இவ்வாறு முன்னாள் இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சிசில் வைத்தியரெட்னா (10 ஆம் பக்கம் பார்க்க)

நவீனசந்தைப் பகுதி விமானத்தாக்குதல்;

## சாவகச்சேரியில் காயமுற்ற மேலும் ஒருவர் மரணம்

### இறந்தோர் தொகை 11ஆக அதிகரிப்பு

(நமது நிருபர்)

சாவகச்சேரி நவீனசந்தைப் பகுதியில் கடந்த 30-ம் திகதி சிறிலங்கா போர் விமானம் நடாத்திய றொக்கட் தாக்குதலுக்கு இலக்காகி படுகாயமடைந்து யாழ். போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த சாவகச்சேரி வர்த்தகர் சங்கத்தலைவர் சங்கரப்பிள்ளை நமசிவாயம் (வயது 57) நேற்று மரணமடைந்தார்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

இ. தொ. காவிற்கு எதிராக செயற்பட

## செல்லச்சாமிக்கு அமைச்சர் பதவி மாகாணசபைஉறுப்பினருக்கு4லட்சம்

மத்திய மாகாண சபையின் இ.தொ.கா.உறுப்பினர்களையும் தம்வசம் இழுப்பதற்காக ஐக்கிய தேசியக் கட்சியினரால் தலா நான்கு லட்சம் ரூபா பணமும், வரிச்சலுகையுடனான வாகனக் கொள்வனவிற்கான அனுமதியும் வழங்கப்பட்டதாக கூறப்படுகிறது.

மத்திய மாகாண சபையின் ஐ.தே.க. முதலமைச்சருக்கு எதிராக கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணையை எதிர்த்து வாக்களிப்பதற்கே இ தொ. கா. வின் ஏழு உறுப்பினர்களுக்கும் இவ்வாறு வழங்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ் ஏழு இ. தொ. கா. உறுப்பினர்களும் முதலில் (10 ஆம் பக்கம் பார்க்க)

## வீரச்சாவு

### 2-ம்லெப். கஜேந்திரன்

மட்டு மாவட்டம் தும்பங்கேணியில் கடந்த 4ஆம் திகதி மதியம் 12 05மணியளவில் சிறிலங்கா விசேட அதிரடிப் படையினர் நடாத்திய எதிர்பாராத தாக்குதலில் காயமுற்ற 2-ம் லெப்டினன்ட் கஜேந்திரன் (வைரமுத்து குணரத்தினம் வெல்லாவெளி மட்டக்களப்பு) எனும் விடுதலைப் புலிகள் போராளி பின்னர் சயனைட் உட்கொண்டு வீரச்சாவடைந்தார்.

இவருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## விறகு வியாபாரிகளை ஹெலி துரத்தி தாக்கியது

### இருவர் படுகாயமடைந்தனர்

(யாழ்ப்பாணம்)

சைக்கிள் விறகு வியாபாரிகள் மீது சிறிலங்கா விமானப்படைக்குச் சொந்தமான உலங்குவானூர்தி ஒன்று கைதடிச் சந்தியில் வைத்து மேற்கொண்ட கண்மூடித்தனமான தாக்குதலால் இரண்டு வியாபாரிகள் படுகாயமடைந்தனர்.

நேற்று மாலை 6.00மணியளவில் கைதடிச் சந்தியில் சைக்கிள் விறகு வியாபாரிகள் வீதியில்வந்துகொண்டிருக்கையில் அவ்விடம்வந்த உலங்கு (10 ஆம் பக்கம் பார்க்க)

## சிறிலங்கா படையினருக்கு இரத்தம் தோய்ந்த ஆண்டு

(கொழும்பு)

1993ஆம் ஆண்டு இராணுவத்திற்குப் பேரிழப்பினை ஏற்படுத்திய ஆண்டாகுமென சிறிலங்காவின் மூத்த இராணுவ அதிகாரிகள் அபிப்பிராயம் தெரிவித்துள்ளனர்.

விடுதலைப் புலிகளுடனான யுத்த நடவடிக்கைகளில் இந்த ஆண்டே அதிக இழப்பை இராணுவத்தினர் சந்தித்தனர் எனவும அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

கடந்த ஆண்டு விடுதலைப் புலிகளுடனான யுத்தத்தில் 1271படையினரை இழந்துள்ளதாக பாதுகாப்புபடை (10 ஆம் பக்கம் பார்க்க )

## வரி விளம்பரம்

### பழங்கள் தேவை

உங்கள் வீட்டுத் தோட்டங்களில் உள்ள பசன் பழங்களையும், பப்பாசிப் பழங்களையும் நாம் கொள்வனவு செய்கின்றோம். TASTE LINE INDUSTRIES (PVT) LTD, 14, Seenier Lane, Jaffna. (சி-8249)

### "அகிலன்ஸ்"

சகல விதமான வாகனங்களின் இலக்கத்தகடுகளும், அழகிய முறையில் எழுதிக் கொடுப்பவர் (மஞ்சள் X கறுப்பு) எழுத்தோவியர் "அகிலன்ஸ்", 426, கண்டி வீதி, அரியாலை. (7072)

### கோழிக்குஞ்சுகள் விற்பனைக்கு

HYLINE BROWN கைலன் பிறவுண் 10நாள் பேட்டு குஞ்சுகள் உடன் விற்பனைக்கு உண்டு "மல்லிகாபதி" சந்தை கிழக்கு ஒழுங்கை மானிப்பாய் (7152)

### திருமண சேவை

பொருத்தமான மணமகன் மணமகள் எம்மிடம் உண்டு தொடர்பு; மங்கள ஏஜென்சி கொய்யாத் தோட்டம், (7162

### விற்பனைக்கு

அரசாங்க, தமிழீழ விடுமுறை நாட்கள் அடங்கிய படக்கலண்டர்கள் ரூபா 6/-க்கு எம்மிடம் விலாசம் பதிப்பித்து பெற்றுக்கொள்ளலாம் மற்றும் பெரிய, நடுத்தரக் கலண்டர்களுக்கும்- ஸ்ரீலங்கா அச்சகம், ராஜா தியேட்டர் அருகாமை, ஸ்ரீகாந்தா அச்சகவேன், யாழ்ப்பாணம், (7140)

### மூக்குக்கண்ணாடி

உங்கள் கண்களுக்கும் முகங்களுக்கும் ஏற்ற- டாக்டர்களின் மருந்துச் சிட்டைக்கு அமைய, மூக்குக் கண்ணாடிகளை தாமதம் எதுவும் இல்லாமல் பெற்றுக் கொள்ள நாடுங்கள்- முப்பது வருடங்களுக்கு மேற்பட்ட சேவையில் இன்றும்- மொறாயஸ்,50, மணிக்கூட்டு வீதி, வெலிங்டன் சந்தி, யாழ்ப்பாணம். (சி/ 8274)

### அறிவித்தல்

நியூ விக்ரேஸ் வாடிக்கையாளரின் கவனத்திற்கு 31- 12- 93 க்கு முன் எம்மிடம் திருத்துவதற்கு ஒப்படைத்த பொருட்களை 31- 1- 94 க்கு முன் பெற்றுக் கொள்ளவும். 31- 1- 94 க்கு பின் அவற்றை மீளப் பெற முடியாது என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கின்றோம். நியூ விக்ரேஸ், பி. எம். சி. ஒழுங்கை, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (7148)

### விற்பனைக்கு

ஆங்கில தட்டச்சு இயந்திரம் OLIVETTI, SMITH CORONA மற்றும் HALDA தமிழ் விற்பனைக்கு உண்டு. தொடர்பு; - R. மருதலிங்கம் 8/1 அம்மன்வீதி, கந்தர்மடம் யாழ்ப்பாணம். (7164)


### கமக்காரர் அட்டை விநியோகம்

(தொல்புரம்)

வட்டு-கிழக்கு விவசாயிகளுக்கு அறிமுக அட்டை கையளிக்கும் வைபவம் அண்மையில் உற்பத்திக் குழுத் தலைவர் திரு. வே. சிவலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

வட்டுக்கோட்டை கிழக்கு கிராமிய உற்பத்திக்குழு பிரிவைச் சேர்ந்த 52 விவசாயிகளுக்கு "கமக்காரர் அறிமுக அட்டை" வழங்கப்பட்டுள்ளது. (41


## தவறிவிட்டது

04-12-93 தாவடிச் சந்திக்கும் போதனா வைத்தியசாலைக்குமிடையில் ஒரு தொகைப் பணம் தவறிவிட்டது. கண்டுஎடுத்துத் தருபவர்க்கு சன்மானம் வழங்கப்படும். தொடர்பு:

**ஈழநாதம்,**
31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம்.

(5081)

## COMPUTER PROGRAMMING IN BASIC LANGUAGE

**4 MONTHS**

திங்கள், புதன் வகுப்புகள்

**ஆரம்பம்: 12-01-1994**

8-30 மணி

Lectures by:

**S. P. SIVAPATHASUNDARAM, M. I. D. P. M. (London)**

- முதல் அறிமுக வகுப்பு இலவசம்
- கட்டணம் தவணை முறையில் மாதம் - ரூ. 400/- மட்டுமே
- Basic கற்கும் மாணவர்களுக்கு Lotus, Word star பாடநெறிகளுக்கான கட்டணங்களில் சலுகை
- அச்சடித்த பாடக் குறிப்புகள்
- கூடிய செய்முறைப் பயிற்சி
- பயிற்சி முடிவில் பெறுமதி வாய்ந்த சான்றிதழ்

SCHOOL OF BUSINESS ADMINISTRATION
(Pioneers in Computer Education)
16, 3rd Cross Street, Jaffna.

(சி-8298)


ஈழநாதம்

## 4-ம் ஆண்டு நிறைவு

### மாணவர்களுக்கான கட்டுரைப்போட்டி

ஈழநாதம் மக்கள் தினசரி தனது நான்காம் ஆண்டு நிறைவை முன்னிட்டு பாடசாலை மாணவர்களிடையே கட்டுரைப் போட்டியொன்றை நடாத்த முன்வந்துள்ளது.

தலைப்பு:

**"போராட்டத்திற்கான சிந்தனையை இன்றைய கல்வி ஊட்டுகிறதா?"**

போட்டி விதிகள்:

- கட்டுரைகள் தாளின் ஒருபக்கத்தில் தெளிவான கையெழுத்தில் அல்லது தட்டச்சு செய்யப்பட்டிருக்க வேண்டும்.
- சுமார் 1500 சொற்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.
- கட்டுரையாளரின் பெயர் முகவரி என்பன தனித்தாளில் எழுதப்பட வேண்டும் என்பதுடன் கட்டுரையாளர் பாடசாலை மாணவர் என்பதும், அக்கட்டுரை அவருடைய சொந்த ஆக்கம் என்பதும் பொறுப்பு வாய்ந்த ஒருவரால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.
- போட்டிக்கான கட்டுரைகள் அனைத்தும் 1994 ஜனவரி 31 ஆம் திகதிக்குப் பிந்தாமல் ஈழநாதம் அலுவலகத்தில் சேர்க்கப்பட வேண்டும். பிந்திக் கிடைக்கும் ஆக்கங்கள் பரிசிலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது.
- போட்டி முடிவுகள் 17 - 02 - 1994 ஈழநாதம் தினசரியில் அறிவிக்கப்படும்.
- இப்போட்டியில் முதலாவது பரிசுபெறும் கட்டுரை நான்காவது ஆண்டுவிழா மலரில் பிரசுரிக்கப்படும்.
- முதல் மூன்று இடங்களையும் பெறும் கட்டுரைகளுக்கு நான்காவது ஆண்டு நிறைவு நாளில் சிறப்புப் பரிசில்கள் வழங்கப்படும்.
- கட்டுரைகள் அனைத்தும் 'ஈழநாதம் ஆண்டு நிறைவுப் போட்டி' என கடித உறையில் இடது பக்க மேல்மூலையில் குறிப்பிடப்பட்டு,

**ஆசிரியர்**
**ஈழநாதம்**
31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம்,
என்ற முகவரியிட்டு சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

## ஸ்ரீ சாரதா அன்னை ஜென்மதினம்

(வடமராட்சி)

பருத்தித்துறை ஸ்ரீ சாரதா சேவாச்சிரமத்தில் பருத்தித்துறை தேசிய சேமிப்பு வங்கி முகாமையாளர் திரு. க. கமலசேகரம் தலைமையில் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு தாய அன்னையின் ஜென்ம தினத்தையொட்டி பொது வைபவ நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன.

இவ்வைபவத்தின் போது வயலின் இசை, மிருதங்க இசை, வாய்ப்பாட்டு, பேச்சு, மலர் வெளியிடுதல் போன்றவை இடம் பெறும். (யோ)


## அறிவுக் களஞ்சியம்- 19

வெளிவந்து விட்டது !

(7085)


## 31-ம் நாள் நினைவு



மலர்வு: 1916.10.05

உதிர்வு: 1993.12.08

### செல்லர் பூமணி

பாசத்தின் உறைவிடமாய் பண்பின் திருவுருவாய் வாழ்க்கையில் கலங்கரை விளக்காய் வழிகாட்டிய அம்மாவே! உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்

கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில்,

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(7166)

## நினைவு கூருகின்றோம்··
## 1994-01-07

1987ஆம் ஆண்டு இதேதினத்தில் யாழ்-கோட்டைப் பகுதியிற் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**கப்டன் பாறூக்** (அகமது லெப்பை முகமது கனீபா -- அக்கரைப்பற்று -- அம்பாறை)

**சீலன்** (தங்கையா சிவகுமார் -- பொம்மைவெளி -- நாவாந்துறை- யாழ்)

முல்லைத்தீவு -- ஒட்டிசுட்டான் பகுதியிற் சிறிலங்கா இராணுவத்தினரின் நடவடிக்கைகளை வேவு பார்க்கச் சென்ற சமயம் ஏற்பட்ட நேரடிச்சமரில் வீரச்சாவெய்திய,

❀ **ராதா** (அடைக்கலம் தங்கராசா - விசுவமடு, ஒட்டிசுட்டான் -- முல்லைத்தீவு)

1989ஆம் ஆண்டு முல்லைத்தீவு -- மூங்கிலாற்றுப் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய,

**லெப். மரிக்கார்** (சின்னத்தம்பி கருணாநிதி-கும்பாவெளி, கொடிகாமம்-யாழ்)

மட்டக்களப்பில் தேசவிரோதக் குழுவினராற் சுட்டுக்கொல்லப்பட்ட தமிழ்ச்சிறுவன்.

1990ஆம் ஆண்டு திருகோணமலையில் எதிர்பாராதவிதமாகக் கடலில் மூழ்கியதில் எமைப்பிரிந்த,

**லெப். மதி** (விஸ்வலிங்கம் செல்வேந்திரன்-கங்குவேலி திருகோணமலை)

1991ஆம் ஆண்டு யாழ் - மணியந்தோட்டத்தில் எமது பயிற்சி முகாமொன்றில் நெஞ்சுவலி காரணமாக எமைப்பிரிந்த,

**நிகன்** (கனகர் மகாதேவன் -- புத்தூர் மேற்கு, நீர்வேலி - யாழ்)

1993ஆம் ஆண்டு மட்டு - அம்பாறை மாவட்டத்தில் களுவந்தன் வெளிப்பகுதியிற் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**ஜெயசூரியன்/நிர்மலன்** (நவரெட்ணராஜா சோதி லஷ்மன்-களுவாஞ்சிக்குடி-மட்டு)

தமிழீழக் கடற்பரப்பில் (கிளாலி) பயணிகளை ஏற்றிச்சென்ற படகுகளை வழிமறித்துச் சிறிலங்காப் படையினர் சுட்டும் வெட்டியும் கண்மூடித்தனமாக மேற்கொண்ட அட்டுழியங்களின் போது காயமுற்று அநுராதபுரம் மருத்துவமனையில் உயிரிழந்த இளம் பெண்.

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.**

❀ இக்குறியிடப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவர்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்.**

(சி-8295)

# குட்டக்குட்டகுனிந்து நின்ற குர்திசு மக்கள்

# குனிந்த தலை நிமிர்கிறார்கள் -இன்று-

300 வருடங்கட்கு மேலான தமது வரலாற்றுப் பாதையில் தமது தேசிய அடையாளத்தை தொலைத்தவர்கள்; வல்லரசுகளாலும் அண்டை அரபு நாடுகளாலும் ஆசை வார்த்தை காட்டி பல முறைஏமாற்றப்பட்டவர்கள்; தமது பிராந்திய நலன்கட்காகப் பகடைக் காயாக்கப் பட்டதால் தமக்குள்ளேயே மோதி மடிந்தவர்கள்; நாகரிகம் அறியாத மலைப்பகுதி நாடோடியினர் என வரலாற்றின் கடை நிலையில் இருந்து குர்திசு மக்கள் முழுஉலகின் கவனத்தையும் இப்போது ஈர்க்கத் தொடங்கி விட்டனர். வெறுமனே, கிளர்ச்சி, பயங்கரவாதம் என வருணிக்கப்பட்ட அவர்கள் போராட்டம் கடந்த 10 வருடங்களின் பின் இப்போது முழு அளவிலான போராகக் கருதப்படும் நிலையை அடைந்து விட்டது மேற்குலகின் தலைநகரங்கள் இப்போது 'குர்திசுதான் வாழ்கிறது' என்றகுரலால் அதிர்கின்றன. மத்திய கிழக்கு தொட்டு உலகமெங்கும் பரவி வாழும் இரண்டரைக் கோடி குர்திசு மக்கள் தமது தாயக விடிவிற்காகத் தம்மாலானதை செய்ய முற்படுகின்றனர் எனவே அடக்கு முறைகட்கு எதிராகத் தமது தலைகளை அறுக்க குர்திசு மக்கள் இப்போது ஆயத்தமகின்றனர் என்கிற செய்தி இப்போது ஓங்கி ஒலிக்கப்படுகின்றது.

குர்திசு மக்களால் தமது தாயகப் பகுதியாக கருதப்படும் துருக்கியின் தென்கிழக்குப் பகுதி இன்று மிகவும் கொந்தளிப்பாக குமுறும் நிலையிலுள்ளது. இரண்டு இலட்சத்திற்கு மேற்பட்ட துருக்கிய துருப்புக்கள் சுற்றிவளைக்க -பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட துருக்கிய விசேட படையணியினர் P. K. K. (குர்திசு தொழிலாளர் கட்சி) குர்திசுப் போராளி அமைப்பின் மையங்களைத் தாக்கி அழிக்க முற்படுகின்றன இவர்கட்கும் வழமையாக சிங்கள அரசு செய்வதுபோல சென்ற வருட டிசம்பர் வரை துருக்கிய அரசால் காலக்கெடு கொடுக்கப்பட்டிருந்தது சுற்றியுள்ள மலைப் பகுதியில் போராளிகளின் மறைவிடங்களை அமெரிக்காவால் வழங்கப்பட்ட பிளாக் கோக் கோப்ரா (Black Hawk Cobra Gunships) அதிரடித்தாக்குதல் உலங்கு வானூர்திகள், F4 ரக குண்டுவீச்சு விமானங்கள் நாள்தோறும் இரவு பகலாக தாக்கி வருகின்றன. வழக்கம் போல கொல்லப்படுவது குர்திசு குடிமக்களாகவேயிருக்கின்றது. இதுவரை பதினொராயிரத்திற்கு மேற்பட்ட குர்திசு மக்களும் போராளிகளும் கொல்லப்பட்டு விட்டதாகக் கூறப்படுகின்றது முனைப்படையும் போராட்டம் காரணமாக இப்போது நாளாந்தம் சராசரி 30 பேர் வரைமாய்வதாக இன்னொரு செய்தி தெரிவிக்கின்றது இப்போது தமது தாயகப் பகுதியின் தலைநகரமாகத் தாம் கருதும் தியர் பக்கிர் (Diyar bakir) பகுதியின் பிரதான வீதிகள். யாவும் இரவில் போராளிகளின் கட்டுப்பாட்டில் உள்ளன பகலில் போராளிகள் நடத்தும் திடீர் தாக்குதல்களால் துருக்கிய இராணுவம் கொல்லப்படுவதும் பின் அவர்கள் மோசமான பழிவாங்கலில் ஈடுபடுவதும் தற்போது நாளாந்த நிகழ்வு. கடந்த 1 வருடத்திற்குள் 10 மாவட்டங்களிலிருந்து 20 மாவட்டமாக பி. கே. கே. போராளிகள் செல்வாக்கு பரவி வருவதாகத் தெரியவருகின்றது. துருக்கியின் வரலாறே இதுவரை காணாத ஒரு நீண்ட போராட்ட வடிவமாகத் துருக்கிய அரசையே நிலைகுலையச் செய்யும்நிலைக்கு இட்டுச் செல்லப் போவதாக இப்போது இப்போராட்டம் கருதப்படுவதாக அமெரிக்கத் தரப்பு இப்போது கருத்துத் தெரிவிக்கின்றது.

துருக்கிய குர்திசு மக்களின் போராட்டத்தின் இன்னொரு பரிணாமம் இதுவரைகாலமும் குர்திசு மக்கள் தொடர்பாக துருக்கிய அரசுகள் காலம் காலமாகக் கடைப்பிடித்துவந்த கொள்கைகளின் படுதோல்வியேயாகும். அங்கராவில் உள்ள ஆட்சியாளர் இதுவரை காலமும் குர்திசு மக்களை ஒரு மக்கள் கூட்டமாக கணிக்கவில்லை; குர்திசு மக்கள் என்றே அவர்கள் அழைக்கப்படுவதில்லை; அவர்களது மொழியை பயன்படுத்துவது தடுக்கப்பட்டது; கலாசார, பண்பாட்டு மரபுகள் மழுங்கடிக்கப்பட்டன; குர்திசு மொழி பத்திரிகைகள் தடை செய்யப்பட்டன; பிற்போக்கான மரபு வாத அறிவற்ற நாகரிகமற்ற மக்கள் கூட்டமாக அவர்கள் ஏளனம் செய்யப்பட்டனர். அவர்களது கிளர்ச்சிகள் வெறுமனே கொள்ளைக்காரர்களின் கலவரங்களாக சித்தரிக்கப்பட்டன. கடந்த 70 வருடங்களிலே 16 தடவைக்கு மேலாக குர்திசு மக்கள் கிளர்ந்து எழும்போது மிகக் கொடூரமாக நசுக்கப்பட்டனர் மொத்தத்தில் குர்திசு என்கிற இனமே இல்லாமல் தனது துருக்கிய இனத்துள் அவர்களை அமிழ்த்தி மூழ்கடிப்பதற்கு சகல வழிகளிலும் மேற்குலக ஒத்தாசையோடு துருக்கி முயல்கின்றது. இம் மக்களை மலைவாழ் துருக்கியர் என்றே அழைத்தது. இது பழைய கதை; இன்று துருக்கியர் சனநாயக பூச்சு, அதன் ஆள்புல ஒருமைப்பாடு துருக்கியின் திரப்பாடு என்கிற மாயக் கோட்பாடுகள் எல்லாம் பி. கே கே யின் பதிலடிகளால் மறையத் தொடங்குவதை உலகம் பார்க்கின்றது.

இத்தகைய மாற்றம் இன்று ஏற்படுவதற்குக் காரணமாக அமைந்தகுர்திசு தொழிலாளர்கட்சி 1980களில் முளைவிட்டது. ''ஆபூ'' (APO) என்று செல்லமாக அழைக்கப்படும் ஆளுமை மிக்க குர்திசு தலைவராக இன்று வியக்கும் அப்துல்லா ஒக்கிளான் (Abdullah Ocalan) ஒரு சிலரோடு 1978-ம் ஆண்டு நவம்பர் 27-ம் திகதிஉருவாக்கியது இவ்இயக்கம். இன்று உலகின் மிக முக்கிய கெரில்லா போராட்ட அணியுள் ஒனறாக விளங்குகிறது: 1984-ம் ஆண்டு சிரியா நாட்டு தளங்களிலிருந்துதமது முதல் தாக்குதலை தொடங்கிய போது அதிகம் பயிற்சியற்ற ஒரு சில நூறு பேரையே இவ் இயக்கம் கொண்டிருந்தது. ஆனால் இன்று உயர் பயிற்சித்திறன் கொண்ட 5,000க்கு மேற்பட்ட போராளிகள், பல்லாயிரத்திற்கு மேற்பட்ட போராட்டத் துணை இராணுவ அணியினரையும் கொண்டு விளங்குகிறது. துருக்கியின் ஐந்தரை கோடி மக்கள் தொகையில் 1 கோடி இருபது இலட்சம் குர்திசு மக்கட்காக மட்டும் பி. கே. கே. போராடவில்லை. ஈரான், ஈராக், சிரியா போன்ற நாடுகளில் சிக்கியிருக்கும் தமது தாயகப் பகுதிகளை ஒன்றிணைத்து சுதந்திர குர்திசுத்தான் தனிநாடு அமைப்பதே இவர்கள் இலக்கு.

இவ் வாறான இலக்கினைக் கொண்டு போராடிவரும் ஒக்கிளான் என்றால் இன்று பழிக்குப் பழி என்கிற பொருள் படுமளவு தீவிரமான போக்கினை P: K. K. தலைவர்கொண்டிருக்கிறார். தனது தந்தையார் 1925-ம் வருட குர்திசு மக்கள் கிளர்ச்சி அடக்கப்பட்ட போது கொல்லப்பட்டதை எப்போதும் நினைவில் கொண்டும் 44 வயதான இவர் மாக்சிய கோட்பாடுகளை வரித்துக் கொண்டாலும் சொல்லை விட செயலுக்கே முக்கியம் கொடுப்பவர் தனது இனத்தின் தலைவிதியைகடுமையாக நொந்து கொள்ளும் இவர் தனது இனத்தைச் சார்ந்த மிதவாதிகள், சமரசவாதிகள் எல்லோரையும் கண்டிப்பது மட்டுமன்றி கடுமையாக தண்டிப்பவரும் கூட. எனவே இன்று அவரது அமைப்பை மேற்குலகம் காழ்ப்போடும், வெறுப்போடும் நோக்குகிறது. அண்மையில் பிரான்சில் குழப்பம் விளைவித்ததாக பலநூறு ஆதரவாளர் கைதாகினர். ஜேர்மனியில் பி கே.கே போராளிகள் இயங்க இப்போது தடை விதிக்கப்பட்டுள்ளது. இப்போது பொல்பொட்டின் கைமர்ருச் அணிக்கும் பெருவில் ஒளிரும் பாதை அணிக்கும ஒத்ததாக பி கே கே. இயக்கமும் மேற்குலகால் கண்டனம் செய்யப் படுகின்றது.

ஆனால் இத்தகைய போக்கிற்கு புறம்பாக பி கே.கே. அமைப்பிற்கு போட்டாபோட்டி சருவதேச அரசியல் காரணமாக பல்வேறு நாடுகளிலிருந்து உதவிகள் கிடைத்து வருகின்றன. துருக்கியின் தெற்கிலும், கிழக்கிலும் உள்ள ஈரான், ஈராக், சிரியா போன்றவை துருக்கியோடான தமது பழைய பகைமை காரணமாக உதவுகின்றன. குறிப்பாக சிரியாவேர கூடுதலாக உதவுகிறது. பி கே.கே தலைவரின் தலைமையகம் டமால்கசிலே இன்றுள்ளது. இப்போது ஐரோப்பிய நாடான கிறிசும் உதவுவதாக கூறப்படுகின்றது துருக்கியோடான தனது பகைமை காரணமாக — சைப்பிரஸ் வாழ் துருக்கியர்க்கு உதவ முன்னர் துருக்கி படையனுப்பி நாட்டை இரண்டாக பிரித்ததற்கு பழிவாங்கும் முகமாக இவர்கள் பி.கே. கேக்கு உதவுகிறார்கள். இப்போது இன்னொரு புதிய நாடும் உதவுவதாக துருக்கி சந்தேகப்படுகின்றது. துருக்கியின் வடக்கில் காக்கசஸ் பகுதியில் முன்னாள் சோவியத் குடியரசுகளான ஜோர்ஜியா, ஆர்மினியா, அசர்பைசான் போன்றவற்றில் நிலவும் கலவரங்கள் காரணமாக ஆர்மினியா குர்திசு போராளிகட்கு உதவுவதாக கூறப்படுகின்றது. இவற்றினை விட மிக நவீனமான போர்க்கருவிகள், தொடர்புச் சாதனங்கள் போன்றவற்றை கொள்வனவு செய்ய தேவைப்படும் பெருமளவு நிதியை வெளிநாடுகளில் பணிபுரியும் 15 இலட்சம் குர்திசு மக்கள் உவந்தளிக்கும் பணம் மூலமும் செல்வந்த வர்த்தகரிடம் அறவிடப்படும் ''புரட்சி வரி'' மூலமும் திரட்டப்படுகின்றது பி.கே.கேக்கு மத்திய கிழக்கு, ஐரோப்பா எங்கும் சங்கிலிப் பின்னல் போலமைந்த முகவர்கள் அமைப்புக்கள் இருப்பது பெரும்உறுதுணையாகவுள்ளது.

எனவே துருக்கியின் முதல் பெண் பிரதமர் என்கிற புகழோடு 5 மாதங்கட்கு முன் பதவி யேறிய தான் சுகில்லர (Tansu Ciller) அம்மையாரின் மகிழ்ச்சி இப்போது நீடிக்கவில்லை. பதவியேற்ற தொடக்கத்தில் அவர் சிங்கள சிறிலங்கா தலைவர்கள் போலவே பயங்கரவாதிகளை மக்களிடமிருந்து முதலில் பிரிக்க வேண்டும், அதற்காக குர்திசு மக்கள் மனங்கள் வெல்லப்பட வேண்டும், அதற்காக தாழ்ந்தநிலையிலிருக்கும் குர்திசு மக்கள் பொருளாதாரம் உயர்த்தப்பட வேண்டும், அவர்களது கலாசார பண்பாட்டு அடையாளங்கள் அங்கீகரிக்கப்பட வேண்டும் என முழங்கினார் ஆனால் இப்போது எதிர்வரும் மார்ச் மாதம் மாநகராட்சி மன்ற தேர்தல்கள் அண்மிக்க பதவியைப் பிடிக்க துடியாய்த் துடிக்கும் எதிர்க்கட்சி தலைவரிற்கு ஒரு வாய்ப்பும் கொடுக்கக் கூடாதெனபதால் கில்லர் அண்மையில் வாக்குறுதிகளை காற்றில் பறக்கவிட்டுவிட்டார். எனவே இன்று குர்திசு மக்கள் சிக்கலைத் தீர்க்க அரசியல் வாதிகள் தயங்கிப் பதுங்கும் நிலையில் இராணுவமே முடிவுகளை எடுக்கின்றது என குர்திசு அறிவியலாளர் குறைப்படுகின்றனர் இராணுவத்திற்கோ தமக்கேற்படும் சேதங்கள் ஒருபுறமிருக்க, போரில தோற்றுப்போனால் தம்கதி என்னவென்கிற சிந்தனையில் இராணுவ நடவடிக்கைகளை தீவிரப்படுத்த முயல்வதின் விளைவேதற்போதையநிலை.

எனவே தனது அங்கத்துவரான துருக்கியின் இன்றைய ஆபத்தான நிலை நேட்டோ அமைப்பிற்கு பெருத்த கவலையைக்கொடுத்துள்ளது. துருக்கிய அரசுக்கு உடனடி ஆபத்து இல்லாத போதும் துருக்கியின் குழப்பநிலை இறுதியில் துருக்கிய சனநாயக முறைதோல்வியடைய, அதன் நவீன மயமாக்கல் போக்கு தடைப்பட்ட இப் பிராந்தியத்தில் துருக்கியின் உறுதிப்பாடு தளர்வடைய வழிவகுக்கும் என்பதால்நேட்டோவோ அல்லது ஐரோப்பிய சமூகமோ இதனை விரும்பவில்லை. இதற்கிடையில் நேட்டோவின் அங்கத்துவம் வகிக்கும் கிறீசின் போக்கும் அண்மையில் மேற்குலகம் விரும்பாத முன்னாள் சோசலிசக்கட்சித் தலைவர் பப்பன்றியோ மீண்டும் மக்களால் தெரிவு செய்யப்பட்டதும் இவர்கட்கு உவப்பாகஇல்லை.

இவ்வாறாக துருக்கி பற்றி மேற்குலகம் கவலைப்படும் போது பி. கே. கே தலைவரோ தமது தாயகப் பகுதி எனக் கருதும் பகுதியில் துருக்கிய மொழி பத்திரிகைகட்கு மதுவருந்துவதற்கு புகைபிடிப்பதற்கு கடும் தடைவிதித்து -அமெரிக்க எண்ணெய்க் கம்பனிகட்கு மூடுவிழா நடாத்தி — துருக்கிய கலாசாரத்தை புகுத்த முனையும் அமைப்புக்களை எரித்து — ஆயிரக்கணக்கில் மூடி துருக்கிய ஆதிக்கத்தைத் தமது தாயகப் பகுதியிலிருந்து வெளியேற்ற மும்முரமாக முனைந்துகொண்டிருக்கிறார் கடந்த 3 மாதத்திற்குள் காட்டிக் கொடுப்போர் எனக் கருதப்பட்ட 200 குர்திசு இனத்தவரிற்கு மரண தண்டனையும் நிறைவேற்றப்பட்டது. மறுபுறத்தில் இவை பெரும் மனித உரிமை மீறலாக இன்று மேற்குலகால் சித்தரிக்கப்படுகின்றன இவ்வாறாக குர்திசு போராட்டம் தொடர்கிறது.

எனவே காலம் காலமாக குட்டக் குட்ட குனிந்த குர்திசு மக்கள் தலை நிமிர்ந்து நிற்கத் தொடங்குகிறார்கள். முனைப்படையும் அவர்கள் போராட்டம் இன்னுமொரு முறை சருவதேச அரசியல் சகதிக்குள் சிக்காமல் வெற்றியடையவேண்டுமென்பதே எமது அவா.

**''துருக்கியில் நிலவும் மேற்குலகம் விரும்பும சனநாயகம் என்பது குர்திசு மக்களை ஒடுக்கி அவர்களைக் கொன்றொழிப்பதுதான் என்றால் அத்தகைய சனநாயக முறை அற்றுப் போவதையே நாம் விரும்புகிறோம். சதிப் புரட்சிகள் நடக்கட்டும், இராணுவம் பதவிக்கு வரட்டும், சனநாயக பூச்சு மறையட்டும் அப்போது எமது வெற்றி உறுதிப் படுத்தப்பட்டு விடும்.''**

**- அப்துல்லா ஒக்கிளான்**
**பி. கே. கே. தலைவர்**

**பாலகுமாரன்**

## புதியரக பென்சில்

தற்பொழுது பயன்படுத்தப் படும் பென்சில்களைத் தயாரிப்பதற்கு ஆண்டு தோறும் ஆயிரக்கணக்கில் மரங்கள் அழிக்கப்பட்டு வருகின்றன, இதனைத் தவிர்ப்பதற்கு உட்சேவா எனப்படும் புதியரக பொலிமர் வகை அறிமுகப் படுத்தப்பட்டுவருகிறது, பிளாஸ்ரிக் ரகத்தைச் சேர்ந்த இவை வலிமையானவை சாதாரணமாக பென்சில் சீவுகின்ற சவர அலகு கத்தி முதலியவற்றால் எளிதில் சீவமுடிகின்றது இதனை ஸோல் மெக்கஸ் ஏ, ஜி எனும் சுவிசிலாந்து நிறுவனம்இந்தியாவுடன்கூட்டுச்சேர்ந்துதயாரித்து பென்சில்உற்பத்தியில் ஈடுபடத் தொடங்கியுள்ளது,

## சிறுகதை

# தாய்மை

வெள்ளையம்மா ஏன் பைத்தியமானாள்?...
வெள்ளையம்மாஏன்... தற்கொலை செய்து கொண்டாள்?...

அவள் பைத்தியமாகவில்லை; அவள் வாழ்ந்த கிராமம் அவளைப் பைத்தியக்காரியாக்கியது. அவளாக தற்கொலை செய்யவில்லை. அவளது கிராமம் அவளை தற்கொலை செய்ய வைத்தது.

அழுகிப்போன சமூகம் அவளைக் கொன்றுவிட்டது.

பத்து ஆண்டுகளுக்கு முன் நடந்து போனதுதான். ஆனாலும அந்த வேதனைகளை ஜீரணிக்க முடியவில்லை.

வெள்ளையம்மாவுக்கு அது சொந்தப் பெயரல்ல. வள்ளிநாயகி. இதுதான் அவளுடைய சொந்தப் பெயர். அவளின் அழகையும் நிறத்தையும் வைத்து வந்த காரணப் பெயரே அது. தேசவிடுதலைப்போர் விழுதெறியு முன்னே அவளது வாழ்வு முடிந்து போய்விட்டது.

மயிலிட்டிக் கிராமம் திடீரென இலங்கை இராணுவத்தால் சுற்றி வளைக்கப்படுகின்றது. எவருமே அங்கிருந்து தப்பிக் கொள்ள முடியாத நிலை. சுற்றிவளைப்பினுள் அகப்பட்டுக் கொண்ட அந்தப் போராளியைக் காப்பாற்ற எவரும் முன்வரவில்லை. அனைவருமே அவனைக் கண்டு பயந்து ஒதுங்கிக்கொண்டார்கள். வீழிகளைப் பிதுக்கிக் கொண்டார்கள்.

வெள்ளையம்மா வீட்டுப் படலையைத் திறந்து கொண்டு ஓடி வந்த அவனையும், அவனது பதற்றத்தையும் அவளால் உடனே புரிந்துகொள்ள முடிந்தது. வெள்ளையம்மா வீட்டினுள் ஓடிச்சென்று பழைய வேட்டியொன்றினை எடுத்துவந்து அவனிடம் கட்டும்படி கொடுத்தாள். தலையினையும் மூடிப் போர்த்துக் கொள்ளும்படி வேறோர் பழந்துணியையும் கொடுத்தாள். நாக்கினை நீட்டும்படி சொல்லிவிட்டு பிளேற் ஒன்றினால் நாக்கில் மெதுவாகக் கீறினாள். இத்தனைக்கும் அவன் எதிர்வார்த்தை எதுவுமே பேசவில்லை. முன்பின் தெரியாத அவள் சொல்வதை இயந்திரம்போல்செய்து கொண்டான். எவ்வாறாயினும் தப்பித்துக் கொள்ள வேண்டியிருந்தது.

வெள்ளையம்மா சாறி உடுத்து குங்குமப் பொட்டு வைத்துக்கொண்டாள். குறுகிய நேரத்துள் விவேகமான சிந்தனையும் செயலும்.

அனைவரையும் வீடுகளிலிருந்து வெளியேறி நிரையாக வரும்படி இராணுவத்தினர் கட்டளை பிறப்பித்தனர். வெள்ளையம்மா அந்தப் போராளியை ஏற இறங்க ஒருதடவைநோக்கிவிட்டுமனதைதிடப்படுத்திக் கொண்டாள். அவனது கையைப் பிடித்துக் கொண்டு மெதுவாக நடக்கத் தொடங்கினாள். இராணுவத்தினரை நெருங்கியதும் கசம் பிடித்தவர்கள் போல் நன்றாக இருமும்படியும் இருமியபின் எச்சிலோடு இரத்தத்தைச் சேர்த்து துப்பும்படியும் வேண்டிக்கொண்டாள். அவனும் அசல் கசக்காரன் போல் மாறினான்.

வரிசை நெருங்கிவிட்டது. அடுத்து இவர்கள்தான்... ''ஏய் ஆர் ஆளு?'' என்ற கேள்வி மிரட்டுதலாக வந்தது. ''என்ர கணவர்தான்; கசநோயில...'' என்று அவள் சொல்லி முடிக்குமுன்பே அவனும் இருமி இருமித் துப்பினான். ரத்தத்தைக் கண்ட இராணுவத்தினர் போ, போ என்பதுபோல் அவசரமாக கையசைத்தனர்.

வெள்ளையம்மா இறைவனுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டாள். இராணுவத்தினர் நின்ற இடத்திலிருந்து ஐம்பது யார் தூரந்தான் சென்றிருப்பார்கள். வீதியொன்றின் குறுக்கே வந்த சைக்கிளில் தாவி ஏறிப் பறந்துவிட்டான். நல்லவேளை இராணுவத்தினர் திரும்பிப் பார்க்கவில்லை.

அந்தப் போராளியைக் காப்பாற்றிவிட்ட பெருமையுடன் சென்ற வெள்ளையம்மாவின் உயர்ந்த அர்ப்பணிப்பை, தாய்மையின் விவேகத்தை, பெண்குலத்தின் பண்பை அவளது கிராமம் பகுத்துணரத் தவறிவிட்டது. இராணுவத்திடமிருந்து அன்று தப்பிய அவளை அவளது சமூகம் விட்டுவைக்கவில்லை. சாக்கடைச் சமூகம் அவளைக் கொன்றுவீட்டது. வெள்ளையம்மாவின் நடத்தைக்கு வால், தலை வைத்தனர். அவளது புனிதமான உள்ளம் புண்பட்டது வேதனையால் வெடித்தது. முடிவு?... அவள் சுயநினை விழந்தாள். காத்திருந்த அவளது சமூகம் அவளுக்கு பைத்தியம் என்று பட்டம் சூட்டியது. வெள்ளையம்மா தன்சமூகத்திலிருந்துவிடுதலை பெற விரும்பினாள். ஒரு விடுதலை வீரனை தேசத்துக்கு காத்துக் கொடுத்த நிறைவோடு தன்னை அழித்துக்கொண்டாள்.

எந்த மக்களால் வெள்ளையம்மா கொல்லப்பட்டாளோ அந்த மக்களின் விடுதலைக்காகவும், தேசத்தின் விடுதலைக்காகவும் அவளின் தம்பியும் தங்கையும் இன்று களத்திலே நிற்கின்றனர். வெள்ளையம்மாபோல் பல வெள்ளையம்மாக்களின் சிறகுகள்தான் அன்று எம் விடுதலை வீரர்கள் பலரை காத்துத்தந்தது. விடிவு தெரியும் விடுதலைப் பயணத்தில் நாம் நிற்க, துணையாகிநின்ற தாய்மையின் தூய்மையை என்றும் புனிதமாக பார்க்க எமது சமுதாயம் பழகிக் கொள்ளவேண்டும்.

கடந்தகால நினைவுகளிலிருந்து நிகழ்கால நினைவுக்குக் கொண்டுவந்தான் என்னருகே இருந்த போராளி, 6.30 மணிக்கு வைத்தியசாலைக்குச் செல்லவேண்டியதை நினைவுபடுத்தினான். சில தினங்களுக்கு முன்புதான் இவனும் வைத்தியசாலையிலிருந்து வெளியேறியிருந்தான். ஏனெனில் காலிலும் கையிலும் அவனுக்கு ஏற்பட்ட காயங்கள் இன்னும் சரியாக ஆறவில்லை. இருவரும் வைத்தியசாலைக்குப்புறப்பட்டோம்.

இரவு 7.00 மணிக்கெல்லாம் வைத்தியசாலைக்குள் நுழைகின்றோம். நீண்டு செல்லும் ஸ்ரெச்சர்களைப் பார்க்கின்றேன். எதுவுமே வெறுமையாக இல்லை. இரும்பிய திசையெல்லாம் வேதனையின் முனகல்கள்; இயலாமையின் அழுகுரல்கள்; ஆவேசத்தின் அட்டகாச வார்த்தைகள். மயக்க ஊசி ஏற்றப்பட்டவர்கள் சுயநினைவின்றி ஏதேதோ வெல்லாம் பேசிக் கொண்டார்கள் மக்களின் விடியலுக்காய் துன்பத்தை தாமே சுமந்துகொண்ட சுதந்திர வீரர்களல்லவா! காயங்கள் ஏற்படும்போதுதான் அவர்களுக்கு ஓய்வு. அதுவும் துன்பத்துடன் கூடிய ஓய்வு. புதைகுழியில் மட்டுமே அவர்கள் நிரந்தரமாக தூங்கமுடிகின்றது.

காலில் கடுமையான முறிவு ஏற்பட்ட போராளி ஒருவன் ''ஐயோ... அம்மா... மக்களைக் காப்பாற்ற வெளிக்கிட்டா இதுதான் நிலை ஐயோ... அண்ண சொன்னதெல்லாம் நிறைவேற்றிப் போட்டம் அன்பு கவனமெண்டவர் அததான் செய்யேலாமப் போச்சுது. அம்மா... என்று தன் வேதனையை மறப்பதற்காக சத்தமிட்டுப் பேசிக் கொண்டிருந்தான் எங்களைக் கண்டதும் எழுந்திருக்க முயன்றான். ஆனால் அது முடியாமல் போயிற்று.

தனது காயத்தைப்பாராது தனது வேதனையை மறந்து சகபோர்வீரனுக்காய் துன்புற்ற அந்த மூத்த தளபதியை நினைத்தபோது கண்கள் கலங்கியது. உண்மையான தாய்மையின் வெளிப்பாடாய் நிற்கும் இவர்களால்தான் விடியலின் பாதையில் எங்கள் பயணம் தொடர்கின்றது.

ஓய்வின்றி ஓடி ஓடி மருந்து கொடுத்துக் கொண்டிருந்த ஒரு மருத்துவ தாதியைப் பார்த்து ''நேசன்ரிக்கு என்னைத் தெரியுதா? இண்டைக்கு கொஞ்சம் ஒய்வாய் இருக்கிறியள் போல கிடக்கு'' என்று என்னுடன் வந்த போராளி கேட்டான்.

''இப்பத்தான் மருந்துகளெல்லாம் குடுத்து முடிஞ்சு வந்து நிற்கிறன். நீங்கள் என்ன இந்தப்பக்கம் இன்னுமொருக்கா என்னோட சண்டை பிடிப்பமெண்டு வந்தனீங்களோ'' என்று சிரித்துக்கொண்டே கேட்டாள். ''இப்பத்தான் மருந்துகளெல்லாம் குடுத்து முடிச்சு வந்து நிற்கிறன்'' என்று அவள் சொல்லி முடிக்கும்போதே மீண்டும் அழைப்பு வந்தது. ஊசியும் மருந்துகளும் அடங்கிய தட்டுடன் மின்னலாய் புறப்பட்டாள்.

**மணலாறு விஜயன்**

''என்ன மச்சான், பாரிடாப்பா, கால்ல ஏதோ மண்மூடையெல்லாம் கட்டித் தூக்கிக்கிடக்கு. நேற்று வந்தாங்கள் பாவியள், கத்திரிக் கோல காயத்துக்குள்ள ஒட்டி ஒட்டி இழுத்தாங்கள். கத்தரிக்கோல் இந்தப்பக்கத்தால போய் மற்றப்பக்கத்தால வெளிக்கிடுது. ஒண்டரைப் போத்திலுக்குக்கிட்ட ஏதோ வெள்ளையாய் எடுத்தாங்கள் எல்லோரும் கொண்டுபோய் பகிர்ந்து குடிச்சுப்பாருங்கோ என்று பேசினன். ஆனால், அதுக்குப் பிறகுதான் வலி குறைவாய்க்கிடக்குது. என்ன நினைச்சாங்களோ தெரியாது மச்சான். போதாக்குறைக்கு இரவுநான் குளறிக் கொண்டிருக்க ஆரோ என் கால தடவிக்கொண்டிருந்தார்கள். ஆற்ரா காலப்பிடிக்கிறவன்? எடுடா கையை; என்று சொல்லிக்கொண்டே நிமிர்ந்து பார்த்தன் ''என்னப்பன் நல்லா வேதினைப்படுத்துதோ'' என்று கேட்டு விட்டுகாலைத்தடவிக்கொண்டிருக்குது மச்சான். ஆரெண்டு உனக்கு தெரிஞ்சிருக்கும். பக்கத்து அறையிலதான கிடக்கிறார் நான் குளறின சத்தங்கேட்டு சாமத்தில மூண்டுசில்லு சைக்கிள்ள மெதுவா இறங்கி வந்து தடவிக்கொண்டிருக்குதுமச்சான். இந்தாள் என்ன பிறப்பிடாப்பா. என்ர வேதினையைப் பாத்திட்டு நேசைக்கூப்பிட்டு ஒரு ஊசிபோடீச்சுது அதுக்குப்பிறகுதான் நித்திரகொண்டனான்'' என்று சொல்லிச் சிரித்தான்.

''இப்பகொஞ்சம் ஓய்வாய் நிற்கிறியள்போல கிடக்குது? என்று அவளிடம் கேட்டதை திரும்ப என்மனதுள் போட்டுப் பார்த்துக்கொண்டேன். விசித்திரமான பிறப்புகள் தன்னலம் மறந்த தாய்மையின் வடிவங்கள். ஒரு போராளியின் காயத்தை ஆற்றி மீண்டும் அவனை விடுதலைப் பாதையில் நடக்க வைக்கும் வரை அவர்கள் படும் இன்னல்கள், துன்பங்கள் கொஞ்சமா?

சற்று தள்ளியிருந்த ஸ்ரெச்சரில் எழுந்திருக்க முடியாமலிருந்த ஒருபோராளியை மெதுவாக தூக்கி தன்னுடன் அணைத்துவைத்துக்கொண்டு உணவு தீத்திக் கொண்டிருந்தாள் ஒரு தாய். குழந்தை போல் அழுதழுது சாப்பிட்டுக்கொண்டிருந்தான் அந்தப் போர் வீரன். அவனை இந்த மண்ணுக்காய் பெற்றுத் தந்த தாயாக இருக்குமென நினைத்தேன். ஆனால் உண்மை அதுவல்ல. அவள் வேறு ஒரு மாவீரனின் தாய். மட்டக்களப்பில் பிறந்து யாழ் மண்ணில் களம் நின்று காயம்பட்ட அந்த வீரனை தன் பிள்ளைகள் போல் கருதி உணவு தீத்தும் அந்தத் தாயின் உள்ளத்தை எப்படிச் சொல்வது அந்தப்போர்வீரனும்அந்தஅன்னையின்அணைப்பில் பெற்றவளின் தாய்மையைக்கண்டுகொண்டான் அதனால்தான்அவனும்அழுது கொண்டான். நெஞ்சை உருக்கும் அந்த நினைவுடன் வைத்தியசாலை யிலிருந்து வெளியேறினோம்.

## நிச்சயமற்ற இருப்பும் இரக்கமற்ற இரவுகளும்

இரக்கமற்ற இரவு
இருள் கொண்டு ஆக்கிரமிக்கும்
உறக்கமற்ற விழிகள்
முகட்டை வெறிக்கும்
மூலையில் குப்பி விளக்கு
குறண்டியவாறு எரியும்
வீதியில் நாய் ஒன்று
ஊளையிட்டபடி ஓடும்
எங்கோ தூரத்தில்.
வேட்டோசை—
சன்னமாய் சடசடத்து ஓயும்
கூவிவந்த ஷெல்லொன்று
மிக நெருக்கத்தில் விழுந்து
செவிப்பறை அதிரச் சிதறும்
சின்ன மகள்—
நித்திரைக்குப் போகுமுன்
கலக்கத்தோடு கேட்டது
காதோடு ஒலிக்கும்
''இண்டைக்கு ராவைக்கும்
ஷெல் அடிப்பாங்களா?''
அவஸ்தை நிறைந்த
அந்தக் கேள்விக்கு
''இல்லை'' என்று
தலையாட்டியதன் குற்றவுணர்வு
மனசை உறுத்தும்
உறங்கிவிட்டால் இவையெல்லாம்
ஒதுங்கிவிடுமென்று
நான் நினைத்தாலும்
மனம் உறங்க மறுக்கும்
உறக்கத்தில் ஆழ்ந்து விட்டால் —
குருதிச் சேற்றில்
உருவமற்ற படிமங்களின்
ஊழிக் கூத்தும்
நிணக்குவியல்களில் இருந்து எழும்
அவலம் நிறைந்த ஓலமும்
கனவுகளில் வருவதையெண்ணி
மனம் உறக்கத்தில் —
ஆழ மறுத்து உளையும்
விடிந்தால் இந்த அவஸ்தை
விலகிவிடும் என்றாலும்
நிச்சயமற்ற இந்த இருப்பில்
இரக்கமற்ற இரவுகளின்
வருகை தொடரும்
இருப்பு நிச்சயமானால்
இரவு பயமின்றிக் கழியும்
இரவு மட்டுமல்ல ......
இருப்பை நிச்சயப்படுத்த
நான் ஏதாவது
செய்தாக வேண்டும்
செய்வதற்கு நிறையவே இருக்கிறது
அதில் ஏதாவதொன்றை
நான் உடனே செய்தாகவேண்டும்.

— எஸ். உமாஜிப்ரான்

## புலவர் என்பவர்...

புலவர் என்பது அறிஞர் எனப்பொருள் படும் புலம் - அறிவு அர் -ஒரு விகுதி புலவரானவர் இயல் இசை நாடகம் என்னும் மூன்று தமிழும் பயின்று ஐந்திலக்கண நெறிகளும் தழுவிக் கடுங்கவி, இன்பகவி, அருங்கவி, பெருங்கவி, என்னும் நால்வகைக் கவிதைகளையும் பாடும் வலியமைந்த அறிஞர் என நிகண்டு நூலார் கூறுவர் கடுங்கவி - ஆசுகவி, அருங்கவி - சித்திர கவி, புலவரும் கவி, கமகன், வாதி, வாக்கி என நால்வகைப்படுவர் கவியானவன் கடுங்கவி முதலிய நால்வகைக் கவிகளையும் பாடுந் தொழில் வல்ல புலவன் கவி பண்டிதன் கமகனாவான் பலகலை உணர்ச்சியாலும் மதிநல வலியானும் கற்றுணராத நாற்பொருள்களையும் கற்றுணர்ந்தவன் போலக் கற்றுணர்ந்தோர் வியக்குமாறு போதிக்கும் புலவன் கமகன் போதிப்பவன் வாதியாவான் ஏதுவும் மேற்கோளும் எடுத்துக் காட்டிப்பல மதங்களை மறுத்துச் கமமதம் ஒன்றையே நிறுத்தி விவாதிக்கும் புலவன் வாதி- வாதஞ் செய்பவன் வாக்கிய வான் அறம், பொருள் முதலிய புருடாத்தங்கள் நான்கையும் திறம்பட விரித்துரைக்கும் புலவன் வாக்கி - வாக்கில் வல்லவன்

அ குமாரசாமி புலவர்
- தமிழ்ப் புலவர் சரித்திரத்தில்

# எமது பாடசாலைகளில் கல்வி -

# கணித விஞ்ஞான பாடம் சார்பான ஒரு கண்ணோட்டம்

## கே சின்னத்தம்பி

தமிழ்ப் பிரதேச மக்கள் பல்வேறு வடிவங்களில், பல்வேறுநெருக்கிடைகளுக்குஉள்ளாகிவரும் இவ்வேளையில், இவற்றுக்கு முகங்கொடுத்துத் தமிழினம்தழைத்தோங்கவழி செய்யும் வகையிலான நடவடிக்கைகளில் நாம் பங்காற்றுதல் மிக அவசியமாகும். பிரதேச அபிவிருத்தி நோக்கில் ஒவ்வொரு துறையும் நன்கு வளர்த்தெடுக்கப்படல் வேண்டும். இந்தவகையில் நன்கு பேணிப் பாதுகாத்து வளர்த்தெடுக்கப்பட வேண்டிய ஒரு பிரதான துறையாகக் கல்வித் துறை அமைகின்றது. கல்வியே ஒரு நாட்டின் அபிவிருத்திக்கான அடித்தளத்தினை அமைப்பதில் பெரும் பங்கு வகிப்பதனை எவரும் மறுப்பதற்கில்லை.

இத்தகைய நிலைப்பாட்டில், எமது பிரதேசத்தின் கல்வி விருத்தியை மேலும் மேலோங்கச் செய்வதற்கு எமது கல்வித்தரத்தின் தற்போதைய நிலை, நலிவான அம்சங்களும் இவற்றுக்கான காரணிகளும், கல்விச் செயற்பாட்டினை வலுவுறச்செய்வதற்கான வழிவகைகள் என்பனபற்றி நாம் அக்கறையுடன் நோக்குதல் பயனுடைத்து. இவ்வாறான பின்னணியில், யாழ்ப்பாண மாவட்டத்தினைக் குறிப்பாகக் கொண்டு, கணித, விஞ்ஞானக் கல்வி தொடர்பாகச் சில கருத்துக்கள் இங்கு நோக்கப்படுகின்றன.

எமது பாடசாலைகளில் கற்பித்தல் நடவடிக்கைகள் உரிய முறையில் இடம் பெறுகின்றனவா? மாணவரின் தேர்ச்சி நிலை எவ்வாறுள்ளது? கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகளை எவ்வாறுமேம்பாட்டடையச் செய்ய முடியும்? என்பன போன்ற பல வினாக்கள் எம் மனதில் எழுவது இயல்பு. இவற்றுக்கான விடைகளைக் கல்வி நிலையங்களுக்குச் சென்று அவதானிப்பதன் மூலம் அறிந்து கொள்ள முடியும் எனினும் இது இலகுவான காரியமல்ல; நடைமுறைச் சாத்தியம் குன்றிய முறையாகும். எனவே பொதுத் தேர்வுப் பெறுபேறுகளை மையமாகக்கொண்டே நாம் இவ்வாறான வினாக்களுக்கு விடைகாண முயல்கின்றோம். ஆயின், க. பொ. த. (சா-த), க. பொ. த. (உ-த) ஆகிய தேர்வுப் பெறுபேறுகளைக் கருத்திற் கொண்டு எமது கல்வி நிலை பற்றி இங்கு ஆராயப்படுகின்றது.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில், நடப்பு ஆண்டில் கல்வி பயிலுவதற்கு, வழமையான எண்ணிக்கையிலும் அரைமடங்கு குறைவானோர் தெரிவு செய்யப்பட்டமை, தமிழ்ப்பிரதேச மாணவர்கள் 1991 க. பொ. த. (உ-த) தேர்வில், அகில இலங்கை ரீதியில் ஏனைய பகுதி மாணவரின் பெறுபேறுகளை விட ஒப்பீட்டளவில் தாழ் பெறுபேறுகளைப் பெற்றுள்ளதனால் தான் என்பது இங்கு கவனிக்கற்பாலது. இத்தேர்வில் தமிழ்ப் பிரதேச மாணவர்கள் தாழ் பெறுபேறுகளைப் பெறுவதற்கான பல காரணிகளுள், இம்மாணவர்களின்தும் தமிழ் மக்களின்தும் சக்திக்கு அப்பாற்பட்ட விடயங்களும் மிக முக்கியமானவை தேர்வு நடைபெற்ற காலமும் சூழ் நிலையும், விசேட சோதனையின் வினாத்தாள்களின் அமைப்பும் புள்ளி வழங்கல் நடவடிக்கைகளும் போன்றவை இவ்வகைக் காரணிகளுக்கு உதாரணங்களாகும் எனினும், இவற்றுக்கான தீர்வுகளோ, பரிகாரங்களோ மாணவரின் கல்விச் செயற்பாடுகளூடாகப் பெறப்படக் கூடியவையல்ல.

மாணவன் கல்வி கற்பதற்கான நேரம், ஏனைய பௌதிக வசதிகள், கற்பித்தற் செயற்பாடுகள் போன்றன தாழ் பெறுபேறுகளுக்கான இன்னுமொருவகைக் காரணிகளாகும் இவ்வகையான காரணிகள்மாணவனின்பாடத்தேர்ச்சி நிலையை நேரடியாகப் பாதிப்பவை எனினும் பொருத்தமான அணுகுமுறைகள், நடவடிக்கைகள் என்பன மூலம் இவற்றுக்குத் தீர்வுகளோ, பரிகாரங்களோ காண்பது கடினமல்ல.

மேலே குறிப்பிடப்பட்ட பின்னைய வகைக் காரணிகள் க. பொ. த. (உ - த) மாணவர்களுக்கு மட்டும் உரித்தானவையல்ல இவை, எம்மட்டத்து மாணவராயினும், அவரவர் பாடத்தேர்ச்சி நிலையிலே பலத்த செல்வாக்கினைச் செலுத்த வல்லன.

க. பொ. த. சாதாரண தரப் பெறுபேறுகளை நோக்குவோமாயின், இப் பெறுபேறுகள் வருடா வருடம் வீழ்ச்சியடைந்து செல்கின்றன க. பொ. த. உயர் தர கல்விக்கான திறவுகோலாக அமையும் இத் தேர்வுப் பெறுபேறுகள், தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்து செல்வதால், க. பொ, த. (உ-த) வகுப்புக்களுக்குத் தெரிவாகும் மாணவர் எண்ணிக்கை மட்டுமன்றி, உயர்தரத்திற் கற்கும் மாணவரின் தேர்ச்சி நிலையும் பாதிப்புக்குள்ளாகின்றது. எமது பிரதேசத்தில் க. பொ த (உ-த) வகுப்பிற் கற்பதற்கான தகுதியைப் பெறும் மாணவர் தொகை தற்போது 40 வீதத்திலும் தாழ்வாக உள்ளமையை நாம் நன்கு உணர வேண்டும்.

### கணித, விஞ்ஞானக் கல்வி:

க. பொ. த. சாதாரண தரத் தேர்வில் குறித்த ஒரு பெறுபேற்று நிலைக்குக் குறையாத பெறுபேற்றினைப் பெற்றுக் கொள்பவர்களே க. பொ. த. (உ-த) வகுப்பினைத் தொடர முடியும், சாதாரண தரத் தேர்வில் கணிதபாடப் பெறுபேறு உயர்தர வகுப்பிற் படிக்கும் வாய்ப்பினை தீர்மானிக்கும் காரணிகளுள் மிகப் பிரதானமானது. ஏறத்தாழப் பத்து ஆண்டுகளுக்கு முன்னர் 40 வீதத்திலும் உயர்வான சித்தியுடன் காணப்பட்ட கணிதபாடப் பெறுபேறு, படிப்படியாக வீழ்ச்சியடைந்து இன்று 30 வீதத்திலும் தாழ்வான நிலையை அடைந்துள்ளது.

விஞ்ஞான பாடம் பற்றி நோக்குவோமாயின் க. பொ. த. உயர்தரத்தில் விஞ்ஞான பாடத்துறையைத் தெரிவு செய்யாத மாணவர்கள் கூடச் சாதாரண தரத்தில் விஞ்ஞான பாடத்தில் சித்தியடைவதைப் பெரிதும் விரும்புகின்றனர் என அறிய முடிகின்றது. இவ்வகையில், விஞ்ஞானமும் பிள்ளையின் உயர் கல்வி வாய்ப்புடன் மிக நெருங்கிய தொடர்பு கொண்ட ஒரு பாடமாக அமைகின்றது.

அதுமட்டுமன்றி, பொதுவான சமூக பொருளாதாரப் பண்புகளுடன் தொடர்புறுத்தி நோக்கும் போது, க. பொ. த. (சா|த) விஞ்ஞானம் முக்கியத்துவமும் மதிப்பும் நிறைந்த ஒரு பாடமாகவே இனங்காணப்படுகின்றது. இவ்வாறான பின்னணியில், க. பொ. த. (சா|த) பொதுத் தேர்வில் பத்து ஆண்டுகளுக்கு முன்னர் 60 வீதத்தை அண்மித்துக் காணப்பட்ட விஞ்ஞான பாடச் சித்தி, இன்று 40வீதத்திலும் குறைவான நிலைக்கு வீழ்ச்சியடைந்துள்ளமை மிக உன்னிப்பாக நோக்கப்பட வேண்டிய விடயமாகும்.

பொதுத் தேர்வுப் பெறுபேறுகள் ஒருபுறமிருக்க, கணிதம், விஞ்ஞானம் ஆகிய இரு பாடங்களிலும் மாணவர் பெறுகின்றதேர்ச்சி நிலை எமது பிரதேச அபிவிருத்திக்கு உதவும் வகையில் அமைதல் அவசியம். பாடப் புலமை மட்டுமன்றி, இப்பாடங்கள் மூலமாகப் பொருத்தமான திறன்களையும் மனப்பாங்கினையும் நாம் மாணவரிடத்தே விருத்தி செய்தல் அவசியமாகும்.

### கற்கும் (கற்பிக்கும்) முறைகள்:

ஒரு மாணவன் ஒரு பாடத்தைக் கற்கின்ற முறையானது, அப்பாடத்தில் அவன் அடையும் தேர்ச்சி நிலையினைத் தீர்மானிக்கும் ஒரு பிரதான காரணியாகும். குறித்த ஒரு பாடம் சார்பாக மாணவனின் தேர்ச்சி நிலை வேறு, தேர்வுப் பெறுபேற்று நிலை வேறு பல சந்தர்ப்பங்களில் இவையிரண்டும் வேறுபட்டனவாக அமைந்து விடுகின்றது. பாடத்தில் முறையான|முழுமையான தேர்ச்சி இல்லாதவர்கள் தேர்வில் உயர் பெறுபேற்றினையும் உயர் தேர்ச்சியுடையோர் தாழ் தேர்வுப் பெறுபேறுகளையும் பெற்றுக் கொண்ட சந்தர்ப்பங்கள் ஏராளம்.

மாணவன், குறித்த பாடத்தில் முறையான விளக்கத்துடன் கற்று, உயர் தேர்ச்சியைப் பெறுவதனை நாம் முதன்மைப்படுத்துகின்றோமா அல்லது விளக்கத்துடன் கற்காவிடினும் உயர் தேர்வுப் பெறுபேறுகளைப் பெற்றுவிட்டாற் போதும் என்கின்ற நிலைப்பாட்டினுள்ளோமா என்பது பற்றி நாம் உறுதியாக இருக்க வேண்டும். இந்த நிலைப்பாடே, கற்பித்தல் முறையை (அதாவது மாணவன் கற்கின்ற முறையைத்) தீர்மானிக்கின்றது.

தனது நாளாந்த வாழ்வுடன் தொடர்புபட்டதாகக் கற்கும் போது, முறைமையான விளக்கத்துடன் கற்கும் போது, பொதுத் தேர்வுகளில் மாணவன் உயர்வான பெறுபேறுகளைப் பெறுவதற்கான வாய்ப்புக்களும் அதிகரிக்கின்றன. ஆனால், உயர் தேர்வுப் பெறுபேறுகள் உயர் தேர்ச்சி நிலையைப் புலப்படுத்துவதாக உறுதி செய்ய முடியாது. இந்த உண்மையை ஏற்று, அதற்கேற்ப மாணவரைக் கற்றற் தொழிற்பாட்டில் ஈடுபடுத்தும் மனோபாவம் இன்று எம் பெற்றோர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் மத்தியில் மிக வறிதாகவே காணப்படுகின்றது. இந்த நிலை மாறவேண்டியது கல்வி மேம்பாட்டுக்கு மிக அவசியமாகும்.

மாணவனின் செயற்பாடு, ஈடுபாடு என்பவற்றினை அதிகரிக்கச் செய்யும் வகையில் விஞ்ஞான பாடத்தில் போதுமானளவு விஞ்ஞானச் செய்கைகளில் மாணவரை ஈடுபடுத்துதல் வேண்டும். கணித பாடத்தில், மாணவர் தாமே கணிதப் பிரசினங்களுக்குத் தீர்வுகாணும் முறைமை ஊக்குவிக்கப்பட வேண்டும். அதாவது, செயன்முறைகளுடனான கற்றல் - கற்பித்தல் நிலைமைகள் இங்கு வலியுறுத்தப்படவேண்டும். இவ்வாறான கற்றல் நிகழ்வுகள் இடம்பெற வேண்டுமாயின் மாணவன் கற்பதற்குப் போதுமானளவு கால அவகாசம் வழங்கப்பட வேண்டும். மேலும், இவ்வகைக் கற்றல்-கற்பித்தல் பாடசாலைகளில் மட்டுமே இடம்பெற முடியும். ஆசிரியர்களும், இவற்றுக்கு ஈடுகொடுக்கும் வகையில் பாடசாலை நேரத்துக்கு அப்பாலும் தமது பணி தொடர்பாகத் தொழிற்படுவதற்குத் தயாராக இருக்க வேண்டும்.

### பிரத்தியேகக் கல்வி:

மேலே குறிப்பிடப்பட்டவாறான வகையில் மாணவன் கற்றலை மேற்கொள்வதற்குப் பிரத்தியேகக் கல்விச் செயற்பாடு பெரும் இடைஞ்சலாகவே அமைகின்றது. முக்கியமாக, மாணவனின் சுய தொழிற்பாட்டுடனான கல்விக்குரிய நேரம் வெகுவாகக் குறைக்கப்படுகின்றது. இங்கு பாடசாலைக் கல்வியா பிரத்தியேகக் கல்வியா சிறந்தது என்பது பற்றி நாம் சர்ச்சைப்படத் தேவையில்லை. சில மாணவர்க்குப் பாடசாலைக்குப் புறம்பான பிரத்தியேகப் போதனை தேவைப்படவும் கூடும். சிறந்த பலனையும் அளிக்கக் கூடும். எனினும், இந்த இரு வகைக் கல்விக்குமாக மாணவன் நேரத்தினைச் செலவு செய்வது, அவனுக்குப் பாதகமாக அமைந்துவிடும் சாத்தியம் அதிகமாக உண்டு என்பதனை நாம் மனதார உணர்ந்தாற் போதும்.

கல்வி அபிவிருத்தியில் அக்கறையுடையோரின் சிந்தனைக்கு இரு சிறு சம்பவங்கள், உதாரணமாக இங்கு தரப்படுகின்றன.

### உதாரணம்1:

''பாடசாலையில், மாணவனுக்கும் போதுமானளவு கற்பிக்கப்படுவதில்லை. அவனுக்கு வேண்டியதனை வழங்குவதற்குப் பிரத்தியேகக் கல்வி அவனுக்கு மிகமிக அவசியம்...'' — இது பிரத்தியேகக் கல்வியை முன்னெடுப்பவர் ஒருவர் கூறியதன் ஒரு பகுதி.

''பிரத்தியேகக்கல்வி காரணமாகக் கற்பித்தற் பணியைப் பாடசாலையில் நாம் ஒழுங்காக மேற்கொள்வது கடினமாகஅமைகின்றது பிரத்தியேகக் கல்வியைப் பின்பற்றும் மாணவன் பாடசாலையில் ஆசிரியர் கற்பிப்பதற்கும் இடைஞ்சலாக உள்ளான்; ஏனைய மாணவர் கற்பதற்கும் இடைஞ்சலாக உள்ளான்..'' இது, மேலேயுள்ள கருத்தைக் கூறியவருக்குப் பதிற் கருத்தளித்த ஒருவரின் வாதம்.

### உதாரணம் 2:

பிரத்தியேகக் கல்விநிலைய நிர்வாகி ஒருவருக்கும் கல்வியியலாளர்ஒருவருக்கும் இடையே இடம்பெற்ற ஓர் உரையாடலின் ஒரு பகுதி

கல்வியியலாளர்:

பிரத்தியேகக் கல்வியூடாக மாணவர் கல்வித்தரம் உயர்வடைவதாக நீங்கள் நிச்சயப்படுத்திக்கூற முடியுமா?

பிரத்தியேகக் கல்வி நிலைய நிர்வாகி:

பல பாடசாலைகளில் கற்பித்தல் ஒழுங்காக நடைபெறுவதில்லை. இக்குறைபாட்டை நீக்கித் தேர்வுகளில் உயர் பெறுபேற்றினை ஏற்படுத்தித்தருவது பிரத்தியேகக் கல்வி நிலையங்களாகும்

கல்வியியலாளர்:

வருடாவருடம் பிரத்தியேகக் கல்வி நிலையங்களின் எண்ணிக்கை அதிகரிக்கின்றது அவற்றுக்குச் செல்லும் மாணவர் எண்ணிக்கையும் அதிகரிக்கின்றது. ஆயினும்பொதுத் தேர்வுகளில் சித்திபெறத் தவறுவோரின் விகிதாசாரமும் வருடாவருடம் அதிகரிக்கின்றதே இதற்கு என்ன சொல்லப் போகின்றீர்கள்?

உரையாடல் இத்துடன் மௌனமாக நிறைவுக்கு வருகின்றது.

### மதிப்பீட்டுச் செயற்பாடுகள்:

கல்வித்துறையில், மதிப்பீடானது பல்வேறு தேவைகளின் பொருட்டு மேற்கொள்ளப்படுகின்றது. மாணவரின் கல்வி நிலையை மேம்படுத்தும் மாணவரின் கற்றலுக்கான உடனடிப் பின்னூட்டலாக அமையும்போதே மதிப்பீடு உச்சப்பயனை அளிக்கின்றது தான் கற்றுக்கொண்டவற்றின் சரி, பிழைகளை அறிவதன் மூலமும் தமது முன்னேற்றம் பற்றி அறிவதன் மூலமும் மாணவர்கள் கற்றலில் ஊக்கம் பெறுகின்றனர். இவ்வாறாயின், பாடசாலைகளில் மதிப்பீடானது அடிக்கடி இடம்பெறவேண்டியுள்ளது. குறிப்பாக, கணிதம் விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் சிறப்பான திறன் விருத்திக்கு இது மிக அவசியமாகும். மாணவரின் தேர்ச்சியை மட்டும் அளவிடுவதாக இல்லாது, அவர்களிடத்துப் பரிகார முறையிலான கற்பித்தல்முயற்சிகளை மேற்கொள்வதற்கும் மதிப்பீடு வழிகோல வேண்டும்.

பாடத்தினைப் போதிக்கும் அதே ஆசிரியர்கள், மதிப்பீட்டு முயற்சிகளை மேற்கொள்ளும்போது, இவ்வாசிரியர்களிடத்துக் கல்விசார் இலக்குகள் பற்றிய தெளிவு விசாலிக்கின்றது. மாணவரின் கணித, விஞ்ஞானபாட அப்பியாசப் புத்தகங்களை ஒழுங்காகப் பார்வையிட்டுத் திருத்தஞ் செய்து கொடுக்கும் வழக்கம் ஆசிரியர்களிடம் மிகத் தாழ் நிலையிற் காணப்படுகின்றது. பாடசாலைநேரத்துள்இதனை எவ்வாறு செய்து முடிக்க முடியும் என்கின்ற மனோநிலை பொதுவாகத் தென்படுகின்றது. மதிப்பீட்டுக் கருவிகளாகச் சோதனைகளைத் தயாரிக்கும் பணியில் ஆசிரியர்கள் ஈடுபடுதல் மிக அரிதாகவே காணப்படுகின்றது. பாடசாலை மட்டத்திலான இடைத் தவணைத் தேர்வுகூட எல்லாப் பாடசாலைகளிலும் இடம்பெறுவதில்லை. இந்நிலைமைகள் முற்றாகவேமாறவேண்டும். குறைந்த பட்சம் மாதம் ஒரு தடவையாவது ஒவ்வொரு பாடத்திற்கும் மதிப்பீடு மேற்

(6ஆம் பக்கம் பார்க்க)

## எமது பாடசாலை

கொள்ளப்பட்டுத் தாமதமேதுமின்றி அதன் பெறுபேறுகள் மாணவர்க்குத் தெரியப்படுத்துதல் மிகஅவசியமாகும்.

இவ்வாறான நடவடிக்கைகள் மூலம் பல நன்மைகளை அடையலாம். மாணவனுக்குப் பின்னூட்டலாக, ஆசிரியர்க்குத் தனது கற்பித்தல் அணுகுமுறையின் வினைத்திறன் பற்றி அறிவிப்பதாக பொதுத் தேர்வுக்கு மாணவனைப் படிப்படியாகத் தயார்படுத்துவதாக... என இப்பயன்களின் பட்டியலை நீட்ட முடியும். தொடர்ச்சியாக மதிப்பீட்டினை ஒவ்வொரு பாடசாலையிலும் மேற்கொள்வதற்கான நிலைமையை உருவாக்கும் பொறுப்பில் யாழ்ப்பாணக் கல்வித்திணைக்களத்துக்குப் பெரும் பங்குண்டு.

விஞ்ஞான பாடத் தேர்வில், செயன் முறைக்கும் உரிய பங்கு வழங்கப்பட வேண்டியதன் அவசியம் உணரப்பட்டுள்ளமையை ஆண்டு 11இற்கு நடாத்தப் பெற்ற பொதுத்தேர்வு நடைமுறையிலிருந்து நாம் அறிய முடிகின்றது. இவ்வாறே, விஞ்ஞானம் ஒரு பாடமாகக் கற்பிக்கப்படுகின்ற சகல வகுப்புக்களுக்கும் விஞ்ஞான பாடச் செயன்முறைத் தேர்வு பரவலாக்கப்படல் வேண்டும். ஆண்டு 6 தொடக்கம், பாடசாலைகளில் தவணைச் சோதனையின் ஓர் அங்கமாக விஞ்ஞான செயன்முறைத் தேர்வினை மேற்கொள்வதற்கான திசையில் யாழ். கல்வித்திணைக்களம் விருப்பைப் புலப்படுத்தியுள்ளமை விஞ்ஞானக் கல்வி மேம்பாட்டுக்கான ஆக்கபூர்வமான சிந்தனையெனக் கொள்ளலாம்.

### மொழித்தேர்ச்சி

பொதுத் தேர்வுக்குத் தமிழ் மொழியும் ஒரு பாடம் என்ற நோக்கில் மொழித் தேர்ச்சி பற்றி இங்கு கருதப்படவில்லை. மாறாக மாணவர் கற்பதற்கு உதவும் ஓர் ஊடகம் என்ற வகையில் மொழியின் பங்கு பற்றியே இங்கு சில கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன.

மாணவன் பாடத்தை வாசித்து விளங்கிக் கொள்ள, ஆசிரியர் சொல்வதை விரைவாக உள்வாங்கிக் கொள்ள, தன் கருத்தினை உரியவேளையில் (சோதனைகள் உட்பட) வெளிப்படுத்த அவனது மொழியறிவு மிக முக்கியமாகும். வினாவில் கேட்கப்பட்டது என்ன என்பது தெளிவாகப் புரிந்திருந்தால் நான் சரியான பதிலை எழுதியிருப்பேன்-' தேர்வுமண்டபத்துக்கு வெளியே வந்தபின் கவலையுடன் புலம்பும் மாணவர் பலரை நாம் சந்திக்கவில்லையா?

பொதுவாக, தமிழ்மொழி பாட ஆசிரியர் தவிர்ந்த, ஏனைய ஆசிரியர்கள், மாணவரது மொழியாற்றல் விருத்தி பற்றி அதிக அக்கறை காட்டுவதில்லை — சிலர் அறவே சிந்திப்பதில்லை. இது தமது பொறுப்பல்ல என்கின்ற தோரணையினைப் புலப்படுத்துகின்றது. மாணவர் மொழி தொடர்பாக விடும் தவறுகளைச் சுட்டிக்காட்டித் திருத்துகின்ற பண்பு ஒரு சில ஆசிரியர்களிடம் மட்டுமே காணப்படுகின்றது. உண்மையில், வெவ்வேறு பாடங்களைக் கற்பிக்கும் ஒவ்வோர் ஆசிரியரும் மாணவனது மொழியாற்றலை விருத்தி செய்ய வேண்டுமென்னும் நோக்கத்தினையும் கருத்திற்கொண்டே பணியாற்ற வேண்டும். எவ்விடயத்தினையும் விளங்கிக்கொள்வதற்குச்சிறந்தஓர் ஊடகமாகமொழிசெயற்படுகின்றது என்பதனை ஆசிரியர்கள் முழுமையாக உணர்ந்து, ஏற்ப செயற்படும் நிலை வளர வேண்டும்.

தங்களுக்கு மொழி வளம் குறைவு அல்லது இல்லை என்னும் மனப்பாங்குடன் பணிபுரியும் கணித, விஞ்ஞான ஆசிரியர்கள் பலரை நாம் காண்கின்றோம். தமது 'மொழிவளத்தினை வளர்த்தெடுப்போம்' என்னும் மனப்பாங்கும் அவர்களிடத்துக் காணப்படுவது அரிது. இவர்கள் இவ்வாறான மனப்பாங்கினை மாற்றியமைத்துத் தமது மொழியாற்றலை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை முனைப்புடன் மேற்கொள்ளுதல் வேண்டும். இஃது மாணவரின் மொழித் தேர்ச்சியின்பால் ஆசிரியரின் கரிசனையை விருத்தி செய்யும்.

### நிர்வாகம்

பாடசாலையில் இடம்பெறும் கற்றல் - கற்பித்தல் நிகழ்வுகளது வினைத்திறன் உயர்ச்சியானது பாடசாலை நிர்வாகத்திலும், கல்வித் திணைக்கள நிர்வாகத்திலும் பெருமளவு தங்கியுள்ளது. பாடசாலை மட்டத்தில் பாடசாலை அதிபரே பிரதம நிர்வாகியாக இயங்குகின்றார். இருக்கின்ற வளங்களிலிருந்து உச்சப் பயனைப் பெறும் வித்தையை நன்குணர்ந்தவராகத் தொழிற்பட வேண்டிய பொறுப்பு அவருக்குண்டு. கற்பித்தல் என்பது மனச்சாட்சியுடன் தொடர்புடைய பணி என்னும் பின்னணியில், உரியபாடங்களை, உரிய வேளையில், உரிய முறையில் ஆசிரியர்கள் கற்பிப்பதனையும், அதனூடாகச் சிறந்த கற்றல் மாணவரிடத்து ஏற்படுவதனையும் ஓர் அதிபர் ஏற்படுத்த முடியும். இதன் பொருட்டு, ஆசிரியர்களுடன் இணைந்த வகையில், விரிவான மேற்பார்வை திட்டமொன்றைப்பாடசாலையில் நடைமுறைப்படுத்தலாம்

கல்வித் திணைக்களத்தினைப் பொறுத்தவரையில், ஆசிரிய வளம், மற்றும் பௌதிக வளங்களை ஏற்படுத்தியும், சிறந்த மேற்பார்வையை மேற்கொண்டும் கல்வி அபிவிருத்தியை மேம்படுத்தலாம். யாழ். மாவட்டத்திலுள்ள ஆசிரிய ஆளணியின் பற்றாக்குறையானது பாடசாலை அபிவிருத்திச் சபை, பழைய மாணவர் சங்கங்கள், கல்வி வளர்ச்சிக் கழகம் ஆகியவற்றின் உதவிகள், ஒத்தாசைகள் மூலம், பல பாடசாலைகளில் நிவர்த்திக்கப்பட்டுள்ளது. எனினும், மாணவர் பரம்பலை முதன்மைக் காரணியாகக் கொண்டு, விவேகமான ஆசிரியப் பங்கீட்டு முறைமை காணப்படுவதாகக் கொள்ளமுடியாது. பாடசாலைகளின் இடப்பெயர்வும் பல பிரச்சினைகளைப் புதிய பரிமாணங்களில் ஏற்படுத்தியுள்ளமையும் ஆசிரிய வளப் பகிர்வைச் சிக்கலாக்கியுள்ளது.

கல்வித் திணைக்களத்தின் இன்னொரு பிரதானமான கல்விசார் நடவடிக்கை பாடசாலை மேற்பார்வையாகும். யாழ். மாவட்டத்திலுள்ள ஆறு கோட்டங்களிலும் இவ்வாறான மேற்பார்வைகள் கோட்ட ரீதியாக இடம்பெற்றுள்ளமையைக் கல்வித் திணைக்கள நிர்வாக அறிக்கைமூலம் அறியமுடிகின்றது, எனினும், இவை கோட்டத்திற்குக் கோட்டம் வேறுபட்ட அளவுகளில் இடம்பெற்றுள்ளன, இவ்வாறு இடம்பெற்ற மேற்பார்வைகளின் எண்ணிக்கையைச் சற்று அவதானிப்பின், முறைமையான மேற்பார்வைக்குட்படாது பல பாடசாலைகள் உள்ளமையையும் அறிய முடியும். மேலும், இம் மேற்பார்வைகள் யாவுமே கற்றல்-கற்பித்தலை மேம்படுத்தும் வகையிலாக அமைந்தன எனவும் கூறமுடியாதுள்ளது, வருடத்தில் ஒரு தடவை மட்டும் ஒரு பாடசாலைக்கு இவ்வாறான மேற்பார்வையைக் கைக்கொள்வதன் மூலம் பெரிதாக எதனையும் சாதித்துவிட முடியாது; புதிதாக 1994 ஜனவரி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ள நிர்வாக அமைப்பு முறையாவது, பாடசாலை மேற்பார்வையைப் பரவலாக்கி விரிவுபடுத்தி நற்பயனை விளைவிக்கும் என்னும் நம்பிக்கையுடன்அதனை எதிர்கொள்வோம். குறைபாடான விடயங்களையும் நலிவான அம்சங்களையும் கண்டறிதல், கண்டறியும் செயலுடன் முற்றுப் பெறாது, மேம்பாட்டுக்கான புதிய பரிமாணங்களிற் செயற்பட வேண்டும். இதன்பொருட்டு ஒவ்வொரு பிரதான கல்வி நிர்வாக அலகிலும் ஆய்வுப் பிரிவு ஒன்று இயங்குதல் விரும்பத்தக்கது,


அனைத்துலகப்பெண்கள்நாளைமுன்னிட்டு
விடுதலைப்புலிகள் மகளிர் அமைப்பினால் நடாத்தப்படும்

**இலக்கிய, ஓவியப் போட்டிகள்**

1994-03-08 இல் நிகழவிருக்கும் அனைத்துலகப் பெண்கள் நாளை முன்னிட்டு, தமிழீழப் பெண்களுக்கான இலக்கிய, ஓவியப்போட்டிகளை நடாத்த விடுதலைப்புலிகள் மகளிர் அமைப்பு முடிவு செய்துள்ளது.

இலக்கியப் போட்டிகள் சிறுகதை, கவிதை என்ற இரண்டு விடயத்தின் கீழ் நடைபெறும்.

ஓவியங்களை எந்தவகை ஓவியங்களாகவும் போட்டியாளர்கள் விரும்பியபடி வரையலாம்.

போட்டிக்கான விதிமுறைகள்:-

- படைப்புக்கள் தமிழீழப் பெண்களின் பிரச்சினைகளுக்கான தீர்வை முன்வெடுப்பதாகவும், அவர்களின் முன்னேற்றத்தைச் சுட்டுவதாகவும் அமைய வேண்டும்.
- கவிதைகள் 35 வரிக்கு மேற்படாதனவாகவும், சிறுகதைகள் 4 பக்கங்களுக்கு மேற்படாதனவாகவும் இருக்க வேண்டும். ஓவியங்கள் போட்டியாளர்கள், விரும்பும் அளவில் வரையப்படலாம்.
- போட்டியாளரின் சொந்தப்பெயர், முகவரி, வயது என்பன தனியாக ஒரு தாளில் எழுதப்பட்டு, படைப்புக்களுடன் இணைத்து அனுப்பப்படவேண்டும்.
- கடித உறையின் இடது பக்க மேல் மூலையில், ''அனைத்துலகப் பெண்கள் நாள் இலக்கியம், ஓவியபோட்டிக்கான படைப்புக்கள்'' என்றுகுறிப்பிடப்பட வேண்டும்.
- நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது
- போட்டி முடிவுத் திகதி -- 1994-01-20
- படைப்புக்களை அனுப்பவேண்டிய முகவரி:

**சுதந்திரப்பறவைகள்,**
**வெளியீட்டுப் பிரிவு,**
**விடுதலைப்புலிகள் மகளிர் அமைப்பு**
**கோண்டாவில்.**

தமிழீழப் பெண்களின் படைப்பாற்றலை ஊக்குவிக்குமுகமாக நடாத்தப்படும் இவ் இலக்கிய, ஓவியப் போட்டிகளில் கலந்து கொள்ளுமாறு அனைத்துப் பெண்களையும் விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பு கேட்டுக் கொள்கின்றது.

**விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பு**
(சி-8296)



**G A.Q. 94/95**

பேராதனை

- A/L-ல் கலை, வர்த்தகம், விஞ்ஞானம் எத்துறையிலாயினும் 3 பாடங்கள் சித்தியடைந்தவர்களும், பயிற்றப்பட்ட ஆசிரியர்களும் மேற்கூறப்பட்ட பாடநெறிக்கு விண்ணப்பிக்கலாம்.
- இதற்கான பல்கலைக்கழகப் பதிவுகள் எமது நிறுவனத்தினால் செய்து தரப்படும்.
- இதற்குரிய விரிவுரைகள் ஆரம்பமாகி விட்டன.

விபரங்களையும், நேர அட்டவணையையும் நேரில் பெற்றுக்கொள்ளவும்.

விபரங்களுக்கு;

**S. அருள்நங்கை**
**புதிய உயர் கல்லூரி**
ஆரியகுளம் சந்தி -- யாழ். (சி-8286)



முதற் தடவையாக

**A/L 94**
**DAY CLASS**
**விஞ்ஞானப் பிரிவு**

ஆரம்பம் *10-01-94* காலை 8.30 மணி

- திங்கள், செவ்வாய், வியாழன், வெள்ளி ஆகிய நான்கு நாட்களும் வகுப்புகள் நடைபெறும்.
- இவ்வகுப்பு பாடசாலை செல்லாத மாணவர்களுக்குரியது.
- முழுப்பாடத்திட்டமும் பூர்த்திசெய்யப்படும்.
- அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக் கொள்ளவும்.

**யூனிவேர்சல்**
கந்தர்மடம் - யாழ்ப்பாணம்.

**பொண்ட் இன்ஸ்ரிரியூட்**
ஸ்ரான்லி வீதி - யாழ்ப்பாணம்.
(சி-8272)



**வேலை வாய்ப்பு**

**Trainees Production Assistant**
**(பயிலுநர் உற்பத்தி உதவியாளர்)**

மேற்படி வெற்றிடத்துக்கு பின்வரும் தகுதியுடைய விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும். உங்கள் விண்ணப்பங்களை 17-01-1994 இற்குமுன்னர் அனுப்பி வைக்கவும்;

தகுதி

வயது: ஆகக்கூடியது 30 - பெண்.

கல்வித்தகைமை:- ஆகக் குறைந்தது க.பொ.த (உ/த) சித்தி.

(தாவரவியல் அல்லது இரசாயனவியல் ஆகிய பாடங்கள் அடங்க வேண்டும்.)

வேதனம்:- அனுபவம் தகுதிகளுக்கு ஏற்ப வழங்கப்படும்.

விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:

நிர்வாக முகாமையாளர்,
TASTE LINE INDUSTRIES (PVT) LTD,
14, Seenier Lane,
Jaffna.

(சி-8297)

# 'சூரியகந்த' மலைத்தொடர் புதைகுழியில் இருந்து வெளிப்படும் உண்மைகள்

சூரியகந்த மலைப்பகுதி இப்போது தென்னிலங்கையின் பரபரப்புகளின் மையமாகப் போய்விட்டது. சப்பிரகமுவ மாகாணத்தின் இரத்தினபுரி மாவட்டத்தின் கொலன்ன தேர்தல் தொகுதியில் இருக்கும் சூரியகந்த மலைப்பகுதி சாதாரணமான சனநடமாட்டமற்ற காட்டுப்பகுதி கடல் மட்டத்திலிருந்து சுமார் 4400 அடிக்கும் உயரமான இப்பகுதியில் சிறிலங்கா ரூபவாகினி கூட்டுத்தாபனத்திற்குச்சொந்தமான ஒளிபரப்பு அஞ்சல் நிலையம் (டவர்) ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை போன்ற தென் மாவட்டங்களில் ரூபவாகினி தொலைக்காட்சி தெளிவாகத் தெரிய வேண்டுமென்பதற்காக எண்பதுகளின் நடுப்பகுதியில் அமைக்கப்பட்ட இக் கோபுரத்தின் பாதுகாப்பிற்காக ஒரு பொலிஸ் காவல்மையமும்அமைக்கப்பட்டுஇருந்தது எண்பதுகளின்இறுதியில்தென்னிலங்கையில்ஜே.வி.பியினரின்கிளர்ச்சி வலுப்பெற்ற போது ஏற்பட்ட அச்சுறுத்தலால் பொலிசாரின் காவல் மையத்திற்குப்பதிலாக நிரந்தர இராணுவ முகாம் தோன்றியது. இது தான் சூரியகந்த பகுதியில் இராணுவ முகாம் தோன்றிய கதை.

ஆனால் சனசந்தடியற்ற இப்பகுதி கால கெதியில் தென்மாகாணத்தில் இருந்தும், மத்திய மாகாணத்தில் இருந்தும் இராணுவ வாகனங்களில் வரும் சிவிலுடையாளர்களால் அல்லது இலக்கத்தகடற்ற வாகனங்களில் வரும் சீருடையாளர்களால் கடத்தப்படும் சாதாரண பொதுமக்களின் சித்திரவதைக் கூடமாகியது. இங்கே எழுந்த கூக்குரல்கள் புதைகுழியில் அடக்கம் செய்யப்பட்டு இருக்கிறது. அப்பாவிகளின் ஓலங்கள் கேட்பாரற்ற நிலையில் சந்தடியற்ற வகையில் அடக்கப்பட்டுள்ளன- என்பவற்றை அண்மையில் இப்பகுதியில் கண்டெடுக்கப்பட்ட எலும்புக்கூடுகள் கதை கதையாகக் கூறத் தொடங்கியுள்ளன.

கடந்த மூன்றாம் திகதி மேல் மாகாண சபையின் முதல்வரும் சுதந்திரக்கட்சியின் முக்கியஸ்தரும், எதிர்க்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோவின் புதல்வியுமான திருமதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரணதுங்க சூரியகந்த பகுதிக்கு அழைத்து வரப்பட்டார். காணாமற் போன புதல்வர்களின் பெற்றோர் சங்க செயலாளரும் இரத்தினபுரி மாவட்டத்தைச்சேர்ந்த சுதந்திரக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினருமானமங்கள சமரவீரகவும், நுவரெலியா மாவட்ட சுதந்திரக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரான எஸ். பி. திசாநாயக்காவும் அங்கு சமுகமளித்திருந்தனர். பல்லாயிரக் கணக்கான மக்களும், பெரும் அளவிலான மாணவ மாணவிகளும் அங்கு குழுமினர். உள்ளூர், மற்றும் வெளிநாட்டு செய்தியாளர்களும், சமூக நல அமைப்பின் பிரதிநிதிகளும், வெளிநாட்டு- உள்நாட்டு மனிதநேய அமைப்புகளைச்சேர்ந்தோரும், சூரியகந்த காட்டுப்பகுதிக்கு திடீர் விஜயம் மேற்கொண்டனர். சூரியகந்த காட்டுப்பகுதியில் ஒரு இடம் தோண்டப்பட்டது நான்கு அடி ஆழம் தோண்டப்படுவதற்கு முன்பாகவே மண்டை ஒடுகளும் மனித எலும்புக் கூடுகளும் மனித சடலங்களின் எச்சங்களும், உடுதுணிகளின் மிச்சமீதிகளும் பயன்படுத்தப்பட்ட துப்பாக்கி ரவைகளும், சப்பாத்துக்களும் செருப்புக்களும் இத்துப்போன பாடசாலை சீருடைகளும் வெளிக்கிளம்பத் தொடங்கின.

கடந்த சுமார் நான்கு மாத காலத்திற்கு முன்பே 'ராவய' என்ற சிங்கள இதழ் வெளியிட்டிருந்த செய்திகள் உண்மையானவைதான் என்பது ஊர்ஜிதப்படுத்தப்பட்டது. இந்த செய்திவெளியிடப்பட்டபோதே இது தொடர்பாக உடனடியாக விசாரணை மேற்கொள்ளும்படி ஜனாதிபதி டி. பி விஜேதுங்கவிற்கும் சபாநாயகர் எம். எச். முகம்மதுவிற்கும் காணாமற்போன புதல்வர்களின் பெற்றோர் வேண்டுகோள் விடுத்திருந்தனர், விசமத்தனமான செய்திகளை வெளியிட்டு அரசாங்கத்தின் மீது அபாண்டமாக பழி சுமத்துவதாக தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ பாராளுமன்றத்திலேயே எடுத்துரைக்க, அரசாங்கம் இதனைத் துச்சமென மதித்து தட்டிக்கழித்துவிட்டது

ஆனால் எதிர்க்கட்சியின் பாராளுமன்றஉறுப்பினரான மங்களசமரவீர வேண்டுகோள்விடுத்ததைதொடர்ந்து ராவய மேலும் பல செய்திகளைச் சேகரித்து அவருக்கு வழங்கியது திரட்டப்பட்ட தடயங்கள் கட்சியின் முக்கியஸ்தர்களின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டு திரைமறைவில் ஆராயப்பட்டது. அரசாங்க எதிர்ப்பு நடவடிக்கை என்ற வகையில் காணாமற் போன புதல்வர்களின் பெற்றோர் சங்கம் முன்பு நடத்திய அடையாள உண்ணாவிரதம், ஊர்வலம் போன்ற பல்வேறு நடவடிக்கைகளுக்கும் எதிர்க்கட்சி ஒத்துழைப்பு வழங்கி வந்தது. ஆனால் ''எமது பிள்ளைகள் பற்றிய தகவலே முக்கியம்; அரசியல் லாபம் அல்ல'' என்றவகையில் இச்சங்கத்தினர் செயற்பட்டு வந்தது குறிப்பிடத்தக்கது.

## காணாமற் போன புதல்வர்கள் யார்?

தென் இலங்கையில் ஜே. வி. பியினரின் இரண்டாவது கிளர்ச்சி உச்சம் பெற்றிருந்த எண்பதுகளின் இறுதிப் பகுதியில் இராணுவ வாகனங்களில் வரும் சிவிலுடையாளர்களால் அல்லது இலக்கத் தகடற்ற வாகனங்களில் வரும் சீருடையாளர்களால் பலரும் கடத்தப்பட்டது தெரிந்ததே. இவ்வாறு கடத்தப்பட்டவர்களில் பலருக்கும் என்ன நடந்தது என்பது பற்றி உள்ளூர் பொலிசாருக்கோ, உள்ளூர் அரசாங்க நிர்வாகிகளுக்கோ தெரியாமல் இருந்தது. இந்தச் சம்பவங்களின் தொடர்ச்சியில் ஒரு அங்கமாக எம்பிலிப்பிட்டிய பகுதியைச் சேர்ந்த பாடசாலையொன்றின் உயர்வகுப்பு மாணவர்கள் பாடசாலையில் வைத்து இராணுவ வாகனத்தில் வந்த சிவிலுடை தரித்தோரால் கடத்திச் செல்லப்பட்டனர். பாடசாலைச் சீருடையுடன் பாடசாலைக்கு வந்த இந்த மாணவர்கள் 31 பேரும் கடத்தப்பட்டு காணாமற்போனதைத் தொடர்ந்து காணாமற்போன புதல்வர்களின் பெற்றோர்கள் கலவரமடையத் தொடங்கினர். பாடசாலை அதிபருக்கும், உயர் வகுப்பு மாணவர்களுக்குமிடையிலான தனிப்பட்ட முரண்பாடே இக்கடத்தலுக்குக் காரணமாக இருக்குமென தெரிவிக்கப்பட்டது. பெரும் பீதியுடன் பரபரப்பும் பதற்றமும் அடைந்த பெற்றோர் தமது பிள்ளைகளை மீட்டுத் தரும்படி மாவட்ட நீதிமன்றம் முதல் உயர் நீதிமன்றம் வரை பல்வேறு இடங்களுக்கும் அலைந்தனர். என்ன நடந்தது? எங்கே உள்ளனர்? என்ற தக

**நிமலராஜன்**

வல்களையாவது பெற்றுத் தரும்படி பல்வேறு மனிதநேய அமைப்புகளிடமும் இப் பெற்றோர் முறையிட்டனர். மனித உரிமை விசாரணை ஆணைக்குழு தனது விசாரணையில் இராணுவத்தைச் சேர்ந்த எட்டுப் பேரை நோக்கி சுட்டுவிரல் நீட்டிவிட்டுத் தனது கடமையை முடித்து கொண்டு விட்டது

சூரியகந்த புதைகுழியில் சுமார் முந்நூற்றுக்கு மேற்பட்டவர்கள் சடலமாகப்புதைக்கப்பட்டிருக்கலாம் எனக் கூறப்படுகின்றது நாலு அடி தோண்டப்படுவதற்கு முன்பே இருபது மனித எலும்புக்கூடுகள் கண்டெடுக்கப்பட்டிருப்பதாகவும் சுமார் நாற்பது அடிவரை இப் புதைகுழி நீளம் உடையதாக இருக்கலாம் எனவும் கூறப்படுகின்றது.

புதைகுழிகள்தோண்டப்படுவதையும் தடயங்கள் வெளியேஎடுக்கப்படுவதையும் கண்டுகொண்டபொலிசார் ஆயுதபாணிகளாகவும் கலவரம் அடக்கும் குண்டகளோடும் ஸ்தலத்திற்கு விரைந்தனர். பொலிசாரின் இத்திடீர் வருகையால் மக்கள் மத்தியில் சலசலப்பு ஏற்பட்டபோதும், அசம்பாவிதம் எதுவும் நேர்ந்துவிடவில்லை.

இந்த சூரியகந்த மலைப்பகுதியை தமது உறுப்பினர்கள் தொடர்ந்தும் பாதுகாக்கப் போவதாகவும், புதைகுழி தோண்டும்பணி தொடரப்படுமெனவும் காணாமற்போன புதல்வர்களின் பெற்றோர் தெரிவித்துள்ள அதேவேளை, நீதிமன்றம் மூலம் அரசாங்கம் இதற்கு தடைவிதித்துள்ளது.

காணாமற்போன புதல்வர்களின் விடயத்தில் கொழும்பிலுள்ள ஐரோப்பிய நாடுகளின் தூதுவர்கள் பலரும் விசேட அக்கறை கொண்டிருப்பதும் மனித உரிமைகள் அமுல் நடத்தப்படுவது குறித்து ஐரோப்பிய நாடுகள் அழுத்தம் கொடுப்பதும் கொழும்புக்கு உவப்பானதாக இல்லை. எனவே அரசாங்கம் புதைகுழியிலிருந்து மீட்கப்படும் எலும்புக்கூடு தொடர்பான விடயங்கள் குறித்து வெளிப்படையாக நீண்ட மௌனம் சாதிக்கும் அதேவேளை மறைமுகமாக கொலை மிரட்டல்களையும் விடுத்து வருகின்றது. இதன் மூலம் அரசாங்கம் மீண்டும் எலும்புக்கூடுகளையும்புதைகுழிகளையுமே சந்திக்க விரும்புவது தெரிவதாக பொதுமக்கள் விசனிக்கத்தொடங்கியுள்ளனர். கொழும்பிலிருந்து வெளிவரும் முக்கிய நாளிதழ்களின் மாகாண பதிப்புகள் புதைகுழியிலிருந்து மீட்கப்பட்டஎலும்புக்கூடுகள் மற்றும் அது தொடர்பான செய்திகள் என்பனவற்றை முக்கியத்துவம் கொடுத்து பிரசுரிக்க வேண்டாமென்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அப் பத்திரிகை நிறுவனங்களுக்கு நேரில் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதேவேளை இந்த ஆண்டு சிறிலங்காவின் தேர்தல் ஆண்டு அரசியல் வாதிகள் மக்கள் ஆதரவு தேடி நாயாக அலையும் காலம் எனவே தேர்தல் பிரசாரத்தின் போது காணாமற்போனவர்களின் விவகாரத்தைசுதந்திரக்கட்சிபூதாகாரமாக்கி தனக்கு அரசியல் லாபம் தேட முற்படும் என்பது வெளிப்படை அத்துடன் சுதந்திரக் கட்சியின் சார்பில் புதைகுழி தோண்டும் விடயத்தில் அக்கட்சியின் தலைவி திருமதி சிறிமாவோவிற்கு பதிலாக திருமதி சந்திரிகாவே முன்னணியில் இருப்பது அக்கட்சியின் எதிர்கால தலைமைத்துவம் குறித்து கோடிகாட்டும் ஒரு நிகழ்வாகவும் அரசியல் அவதானிகளால் சுட்டிக்காட்டப்படுகிறது.

இது காலவரையில் சிறிலங்காவின் தேர்தல்களின் போது உணவு, வேலைவாய்ப்பு, கல்வி வாழ்கைச் செலவு உயர்வு போன்ற விவகாரங்களே முன்னிலையில் இருந்து வந்துள்ளது. அரிசி விலை அதிகரிப்பும் ஆடைவகையின் விலையேற்றமும் ஆட்சி அதிகாரத்தை கைமாற்றிய நிலையே இது காலவரையிலான சிறிலங்காவின் வரலாறாக உள்ளது. ஆனால் இனிவரும் தேர்தல்களின் போது புதைகுழியில் புதைக்கப்பட்ட சடலங்களும், மீட்கப்படும் எலும்புக் கூடுகளும், வடக்கு, கிழக்கு யுத்தமும், மனித உரிமை மீறல்களுமே முக்கியத்துவம் பெறக்கூடும் என்பதையே எம்பிலிப்பிட்டியவில் கடத்தப்பட்டு சூரியகந்த காட்டுப்பகுதியின் புதைகுழியில் மீட்கப்பட்டவர்களின் கதைகள் எடுத்துக் காட்டுகின்றன இதேவேளை எண்பதுகளின் இறுதிப்பகுதியில் தென்னிலங்கையில் மட்டும்சுமார்60,000க்கும்அதிகமானவர்கள் காணாமற் போயிருப்பதும், இவர்களின் ஆவிகள் கூட ஐ. தே. கவை அச்சுறுத்தும் என்பதும் இங்கு சுட்டிக்காட்டப்படத்தக்கதே.

# இலையுதிர் காலத்தில் பிராங்பேட்டில் உலகப் புகழ் புத்தக கண்காட்சி!

ஒவ்வொரு இலையுதிர்காலமும் புத்தகப் பிரியர்களுக்கு கொண்டாட்டம்தான் அப்போதுதான் ஜெர்மனியில் உள்ளஃப்ராங்பர்ட் நகரத்தில் உலகப்புகழ் பெற்ற புத்தகக் கண்காட்சி நடைபெறுகின்றது.

ஆண்டு தோறும் சுமார் எண்பது நாடுகளைச் சேர்ந்த எட்டாயிரம் புத்தக வெளியீட்டாளர்கள் இந்தபுத்தகக் கண்காட்சியில் கலந்துகொள்கிறார்கள். சுமார் முப்பதாயிரத்திற்கும் மேற்பட்ட தலைப்புக்களில் உலகெங்கிலுமிருந்து புத்தகங்கள் இக்கண்காட்சிக்கு வந்து சேர்கின்றன.

இந்த ஆண்டும் அக்டோபர் 6 முதல் 11 வரை இக் கண்காட்சி நடைபெற்றது. இப்புத்தகக் கண்காட்சி வெறும் புத்தக விற்பனையால் மட்டுமே முக்கியத்துவம் பெறுவதில்லை, புத்தக வெளியீட்டாளர்களுடன் பல்வேறு நாடுகளை சேர்ந்த எழுத்தாளர்களும் விமரிசகர்களும் இக்காட்சிக்கு வருகை தருகின்றனர்.

இப் புத்தகக் கண்காட்சியை ஜெர்மனியர்கள் ஒரு கலாசார விழாவாகவே கொண்டாடுகின்றனர்.

இக் கண்காட்சிக்கு பத்திரிகைகள், ரேடியோ ரி.வி போன்ற தகவல் தொடர்பு சாதனங்கள் பெருமளவு முக்கியத்துவம் தருகின்றன.

ஒவ்வொரு ஆண்டு கண்காட்சியிலும் ஏதாவது ஒரு நாட்டின் இலக்கியத்திற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு, அதை மையமாக வைத்து பல்வேறு கலாசார நிகழ்ச்சிகள் அமைக்கப்படுகின்றன. இந்த அடிப்படையில் இந்த ஆண்டு பெல்ஜியம் மற்றும் நெதர்லாந்து நாடுகளின் இலக்கியத்திற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சிகளுக்கு பெல்ஜியத்தின் மன்னரும் நெதர்லாந்து அரசியும் பொறுப்பேற்றுப் புரவலர்களாக இருந்தனர்,

புத்தக அரங்குகளுடன் ஓவிய அரங்கொன்றும் கண்காட்சியில் இடம்பெற்றிருந்தது. இந்தஅரங்கில் அச்சிடப்பட்ட ஓவியங்கள், போஸ்டர்கள், வாழ்த்து அட்டைகள் போன்றவை மட்டுமே இடம் பெற்றிருந்தன.

இதுபோன்ற பல்வேறு கலாசார நிகழ்ச்சிகள் அமைக்கப்பட்டிருந்தாலும் கண்காட்சியின் பிரதான நோக்கமான புத்தகவிற்பனை எதுவிதத்திலும் பாதிக்கப்படாது. புத்தக விற்பனையுடன் மொழிபெயர்ப்பு, மறுபதிப்பு உரிமைகளை வாங்குவது போன்ற வியாபார பேரங்களும் உற்சாகமாக நடைபெறும்.

இக் கண்காட்சியில் இந்தியாவின் பங்கும் கணிசமானது. உலகிலேயே ஆங்கிலப் புத்தகங்களை பெருமளவு உற்பத்தி செய்யும் நாடுகளில் இந்தியாவும் ஒன்று. ஆண்டு தோறும் இந்தியாவில் சுமார் இருபதாயிரம் தலைப்புகளில் ஆங்கிலப் புத்தகங்கள் வெளியிடப்படுகின்றன. ஆண்டு தோறும் நானூறு மில்லியன் ரூபாய்க்கு இந்தியா புத்தகங்களை ஏற்றுமதி செய்கின்றது. இந்திய அரங்குகள் மக்களால் நிரம்பி வழிந்ததில் ஆச்சரியமில்லை.

சரி, இவ்வளவு அற்புதமான புத்தகக் கண்காட்சியை நடத்துபவர்கள் யார்?

ஜெர்மானிய புத்தக வெளியீட்டாளர்களும், புத்தக விற்பனையாளர்களும் சேர்ந்து ஒரு அமைப்பை உருவாக்கி நடத்தி வருகின்றனர். அவர்கள் தான் இந்த பிரம்மாண்டமான புத்தகக் கண்காட்

(8ஆம் பக்கம் பார்க்க)

ஜனவரி 9' ஞாயிறு (மாலை 3 மணி) முதல்
புதிய பிரிவுகள் ஆரம்பம்

O/L (ஆண்டு 11)
ஆண்டுகள் 10, 9

★ உங்கள் அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளவும்.

**புதிய உயர் கல்லூரி**

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்

(சி-8286)


## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்:
01-02-1961

மறைவு:
19-12-1992

அமரர்

**தாமோதரப்பிள்ளை விமலநாதன்**

திதி: 07-01-1994


ஆண்டு ஒன்று ஆடி, அசைந்து சென்றது
ஆறாத்துயரம்மா, ஆழப் புதைந்து நிற்கிறது
வேதனையை வெல்வார் யார்? விழி நீரைத தடுக்க
போதனையால் முடியுமோ! புண்ணியனே நாதா!
''விமலனை''த் தொழுவதொன்றே, மனதினை!
சேற்றுமோ

ஆத்ம சாந்திக்குப் பிரார்த்திக்கின்றோம்.

பெரியமாவடி,
சாவகச்சேரி. (7089)

அப்பா, அம்மா,
சகோதரர்கள்.

## 31-ம் நாள் நினைவலைகள்



பிறப்பு.
11-11-1935

இறப்பு.
8-12-1993

**அமரர் வேலுப்பிள்ளை துரைராசா**

(யாழ். வேம்படி சந்தி தேநீர்ச்சாலை உரிமையாளர்)

என்றும் உங்கள் சிரித்தமுகம்
காணாது தவிக்கின்றோம்

என்றும் மறவாத,
தாய், மனைவி, பிள்ளைகள்,
சகோதர, சகோதரிகள், மைத்துனர்கள்,
மருமக்கள், பெறாமக்கள்.

சிவன் வீதி,
உரும்பராய் கிழக்கு,
உரும்பராய். (சி8287)

### சுய முயற்சிக்கு முதன்மை

(தொல்புரம்)

யாழ். மாவட்டத்தில் நடப்பு ஆண்டு விவசாய அபிவிருத்தித் திட்டங்களுக்கு முதன்மை இடத்தினை வழங்கி அவை சுயபொருளாதார அபிவிருத்தி நோக்கம் கொண்ட திட்டங்களாக அமையவுள்ளதென தெரிய வருகிறது.

யாழ்.மாவட்டத்திற்கு பன்முக வரவு செலவு திட்டத்தின் கீழ் கிடைக்கவுள்ள நிதியில் கூடிய அளவு பகுதியை சுயபொருளாதார நோக்கம் கொண்ட விவசாய அபிவிருத்தி செயற் திட்டங்களுக்கு பயன்படுத்துவதென நடந்த 94ஆம் ஆண்டிற்கான செயற்திட்டங்கள் தொடர்பான கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளதாகவும், ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவிலும் மேற்கொள்ளவுள்ள அபிவிருத்தித் திட்டங்களின் விபரங்கள் அலுவலகங்களிலிருந்து சேகரிக்கப்படுவதாகவும் தெரியவருகிறது. (41)

### கே. கே. எஸ். வீதி பலத்த சேதம்

தொடர்ந்து பெய்து வரும் மழையினால் யாழ்- காங்கேசன்துறை பிரதான வீதி பல இடங்களில் பலத்தசேதமடைந்துள்ளது. குண்டும், குழியுமாக இவ்வீதி பல இடங்களில் காணப்படுவதால், பாதசாரிகள் பெரும் கஷ்டப்பட்டே பயணிக்க வேண்டியுள்ளது.

யாழ் குடாநாட்டின் முக்கிய வீதிகளில் ஒன்றான இவ்வீதி மீளப்புனரமைப்புச் செய்ய வேண்டிய அவசியம் பற்றி பொதுமக்கள் புகார் தெரிவித்தனர். (09)

---

### இலையுதிர்

சியை நடத்துகின்றனர். இந்த அமைப்பு புத்தகக்கண்காட்சியை நடத்துவதோடு நின்றுவிடுவதில்லை.

ஆண்டு தோறும் சிறந்த புத்தகங்களைதேர்ந்தெடுத்து அதை எழுதிய ஆசிரியருக்கு விருதும் வழங்கி கௌரவிக்கின்றனர். உலகமக்களிடையே சமாதானமும், மனிதாபிமானம் இவை சிறந்து ஓங்க வகை செய்யும் புத்தகங்களுக்கு இப்பரிசு அளிக்கப்படுகின்றது. ஆல்பர்ட் ஸ்விட்ஸர் போன்ற மேதைகள் இப் பரிசுகளை பெற்றுள்ளனர். இந்த ஆண்டு இப்பரிசைப் பெற்றவர் பிரெடரிக் ஸ்சோலமர் என்ற மதப் பிரசாரகர். இவர் முன்னாள் கிழக்கு ஜெர்மனியை கடுமையாக விமர்சித்தவராவார்.

நன்றி
**ஜெர்மன் நியூஸ்**


SPOKEN ENGLISH

ஆரம்பம்:
9-1-94 (8 மணி)
by
BRITTO

புதிய
உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி, யாழ்.
(சி-8285)


### விபுலானந்தர் அதிர்ஷ்டலாபச்சீட்டிழுப்பின் அதிர்ஷ்ட இலக்கங்கள்

1-ம் பரிசு 2502, 2-ம் பரிசு 0864
3-ம் பரிசு 1235

10 ஆறுதல் பரிசுகளின் இலக்கம்:-
3176, 634, 723, 1272, 2984,
2930, 3388, 1449, 1921, 3000

தைப்பொங்கல் தினத்திற்கு முன்னர் பெற்றுக்கொள்ளலாம்.

இடம்:- கரணவாய் தெற்கு விபுலானந்தர் நாலகம்

(7161) -நிர்வாகம்

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



**சித்திரவடிவேல் இராசதுரை**

(ராஜன்)

(யா. சித்தி விநாயகர் வித்தியாலய பழைய மாணவர்)

பிறப்பு:
25-09-1972

இறப்பு:
08-01-1993

ஆண்டொன்று ஆனாலும்
ஆறாது உன்நினைவு என்றும்
வாடாத றோஜா போல்
ஒளிவீசும் உன் முகமோ
எம் கண்கள் எதிர் எதிரே
இன்னும் இன்னும் தெரியுதடா
ராஜன் என்று அழைத்தவுடன்
ஓடிவந்து தோள் கொடுக்கும்
ராஜகுணம் கொண்டவனே
உனைப் பிரிந்து தேடுகின்றோம்
உனை இழந்து வாடுகின்றோம்
எம் அன்புச் செல்வமே நீ
மறுபடியும் பிறப்பெடுத்து
எம்முடனே வாழவேண்டும் என்று
ஆண்டவனை வேண்டுகின்றோம்;
உன் ஆத்மா சாந்தியடைக.

- குடும்பத்தினர்

சுப்பர்மடம், பருத்தித்துறை. (7163)


**தரமான போட்டஸ்ரட் பிரதிகளுக்கு இளந்தென்றல் யாழ்ப்பாணம்.**

(சி-8293)

# ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க அரசாங்கத்தால் யுத்த ஆண்டாகப் பிரகடனப்படுத்தப்பட்ட 1994

**1994** ஆம் ஆண்டு சிறிலங்காவில் தேர்தல் ஆண்டாக அமையும் அதேவேளை தமிழீழத்தில் இது ஒரு யுத்த ஆண்டாக அமையும் என்பதே இராணுவ அரசியல் விமர்சகர்களின் கணிப்பீடாகும். இக்கணிப்பீட்டை உறுதிப்படுத்துமாப் போன்றே சிறிலங்கா அரசியல் இராணுவ வட்டாரங்களின் நடவடிக்கைகளும் உள்ளன.

கடந்த ஆண்டு சிறிலங்கா இராணுவத்திற்குப் பெருத்த துயர் மிகுந்த ஆண்டு என்பதில் எவருக்கும் சந்தேகமில்லை அவ்வாண்டில் சிறிலங்காஇராணுவகட்டமைப்பு விடுதலைப்புலிகளால் உருக்குலைக்கப்பட்டதென்றால் மிகையாகாது இதன் விளைவாக, ஆண்டின் முடிவில், யுத்தம் ஒரு புதிய பரிணாமத்தை எட்டியிருந்தது.

கடந்த ஆண்டில், விடுதலைப்புலிகள் இயக்கம் இருமுனைகளில்யுத்தத்தை நகர்த்தியிருந்தார்கள். இதில் ஒன்று நேரடியான அணிகள், தொடர் காவலரண்கள் என்பனவற்றைத் தாக்கி அழிப்பதில் இருந்து, பெரும் முகாம்களை நிர்மூலமாக்கும் பெரும் தாக்குதலுக்குச் சென்றிருந்தது. இதில் விடுதலைப் புலிகள் பெயரிட்டு நடத்திய இரு தாக்குதல்களுமே அவர்களுக்குப் பெரு வெற்றியைத் தேடிக் கொடுத்திருந்தன.

இதில் ஒரு தாக்குதல்- இதயபூமி I - இராணுவக் கட்டமைப்பில் மாற்றத்தை ஏற்படுத்தியதென்றால், இரண்டாவது தாக்குதல் - ஒப்பரேசன் தவளை - இராணுவத் தளபதியை பதவிவிலகச் செய்ததெனலாம்.

இரண்டாவது முனையாக கடற்புலிகள் தமது தாக்குதல்களை அதிகரித்தார்கள். விடுதலைப்புலிகளைப் பொறுத்து இவ்வாண்டைக் 'கடற்புலிகளின்ஆண்டு' எனக் கூறும் அளவுக்கு கடற்புலிகளின் வளர்ச்சி இருந்தது: சிறிலங்காவின் கடற்படை வரலாற்றில் ஒரு தளத்தை இவ்வாண்டிலேயே கடற்படை இழந்தது. அதேவேளை பெருமளவு கடற்படையினரையும் பறிகொடுத்திருந்தது.

ஆனால் இவை எவ்வாறு இருப்பினும் கடந்த ஆண்டிற்கான போரை யாழ்.கடல் நீரேரிக்கான போர் என்றே கொள்ள முடியும் ஏனெனில் போரின் மையம் யாழ். கடல் நீரேரியையே கொண்டிருந்தது கடந்த ஆண்டில் இடம் பெற்ற இருபெரும் சமர்களில் ஒன்று ஒப்பரேசன் யாழ் தேவி - கடல்நீரேரியின் வடமுனைக்கிலும், மற்றையது ஒப்பரேசன் தவளை - கடல்நீரேரியின் தெற்கு, தென்மேற்கிலும் இடம் பெற்றதில் இருந்தே புரிந்துகொள்ள முடியும்.

இறுதியாக சென்ற வருட முடிவில் ''போரின் மையம்'' -யாழ் கடல்நீரேரி-விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டினுள் வந்தது. அத்தோடு, விடுதலைப் புலிகளின் ஆயுத பலமும் கணிசமான அளவில் உயர்ந்தது. இதேவேளை சிறிலங்காவின் இராணுவக் கட்டமைப்பானது உருக்குலைந்து பல மாற்றங்களை எதிர்பார்த்து மிகவும் பலவீனமான நிலையை அடைந்தது

இதன் உச்சக்கட்டமாக இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சிசில் வைத்தியரெட்ணாவின் பதவி விலகல் -ஒருவகையில் பதவிநீக்கம் என்றே கொள்ளலாம்- இருந்தது. இந்த நிலையில் இராணுவ கட்டமைப்புமாற்றம் யுத்ததந்திரோபாய மாற்றம் என்பவற்றை சிறிலங்கா இராணுவம் வேண்டிநிற்கின்றதெனலாம்.

ஆனால் இவை எவ்வாறு இருப்பினும் சிறிலங்கா அரசாங்கம் குறிப்பாக ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க இவ்வருட முற்பகுதிக்குள் இராணுவம் துரித கதியில் வெற்றிகளை ஈட்டவேண்டும் என்ற முனைப்புடன் செயற்பட்டு வருகின்றார் பெப் 4-ம் திகதிக்குமுன் குடாநாடு மீதான தாக்குதல் திட்டம் தமது கையில் ஒப்படைக்கப்பட வேண்டும் என வலியுறுத்தியுள்ளார். தேர்தல் ஆண்டில் பெரும் ராணுவவெற்றிஒன்று அதன்வெற்றிக்கு அவசியமாக இருப்பதே காரணமாகும். இதேவேளை, இராணுவத் தலைமைக்கும், தமது இழந்த கௌரவத்தை மீள நிலைநாட்டிக் கொள்வதற்கு ஒரு பெரும் வெற்றி அவசியம் என்ற நிலையில், போருக்கான முழுமுயற்சியில் இராணுவத் தலைமை தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

இராணுவத் தலைமை இம்முயற்சியில் முக்கிய பணியாக இரு அம்சங்களில் தீவிர கவனம் செலுத்துகின்றது. ஒன்று தோல்வியினால் மனச்சோர்வுற்ற இராணுவத்திற்குத் தென்பூட்டுவதும், இராணுவக் கட்டமைப்பை மாற்றியமைப்பதுமாகவுள்ளது. இதன் ஒரு படியாக இராணுவத்திற்கு நம்பிக்கையையும், உற்சாகத்தையும் கொடுக்கத் தக்க வகையில் நவீன இராணுவத் தளபாடக் கொள்வனவில் இராணுவத் தலைமை அக்கறை காட்டுகின்றது. இதன் மூலம் இராணுவத்திற்கு உற்சாகமும், நம்பிக்கையும் ஊட்ட முற்படுகின்றது.

இதேவேளை, இராணுவத்தினரின் சேம நலன்களைக் கவனிப்பதிலும் பெரிதும் கரிசனை செலுத்தத் தொடங்கியுள்ளது. இம்முயற்சியில், அரசியல்வாதிகளினதும், கொடைவள்ளல்களினதும் ஒத்துழைப்பும் பெறப்பட்டு வருகின்றது.

மேலும், இராணுவ உயர் அதிகாரிகள் இராணுவக் கட்டமைப்பில் செய்யப்பட வேண்டிய மாற்றங்கள் பற்றியும் வலியுறுத்தி வருகின்றனர். கடந்த முதலாம் திகதி புதிய இராணுவத்தளபதியாகப் பதவி ஏற்றுள்ள லெப். ஜெனரல்ஜெரிடிசில்வா இரு தினங்களில் ஜனாதிபதியைச் சந்தித்த பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய போது இராணுவக் கட்டமைப்பு மாற்றத்தின் அவசியம் பற்றியும் பேசியுள்ளார்.

இக் கட்டமைப்பு மாற்றத்தில், களத்தில் நிற்கும் அதிகாரிகள் சுயமாகத் தீர்மானம் எடுப்பதற்கு அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் என்பது முக்கியமாக வலியுறுத்தப்படுவதாகத் தெரிகின்றது. களம் செல்லும் அதிகாரிகளுக்கே பதவி உயர்வு என்ற நிலைப்பாட்டைக் கொண்டுள்ள ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கவின் கோட்பாட்டிற்கு இது பெரும்பாலும் பொருத்தப்பாடானதாக இருப்பினும், இதுவரை இராணுவத்தினரின் கைகளில் இருந்த கனிஷ்ட அதிகாரிகளின் பதவி உயர்வு உட்பட இராணுவ உயர்மட்ட அதிகாரங்கள் சிலவற்றைத் தனது கட்டுப்பாட்டில் கொண்டு வந்துள்ள ஜனாதிபதியின் முடிவு இதற்குஎதிர் பார்க்கப்படுவதாகவே உள்ளது.

இதேவேளை, ஐந்து பிரிகேடியர்களை மேஜர் ஜெனரலாகப் பதவி உயர்த்தியுள்ளமையும், மேலும் பலர் பிரிகேடியர்களாக உயர்த்தப்பட்டமையும் பதவிகளில் தோன்றியுள்ள வெற்றிடங்களை நிவர்த்தி செய்து இராணுவக் கட்டமைப்பைச் சீர் செய்யும் நடவடிக்கையில் டி. பி.விஜேதுங்க விழிப்பாக இருப்பதையே காட்டுகின்றது.

இவ்வாறான இராணுவ புனரமைப்பு ஒருபுறமிருக்க முன்னாள்இராணுவத்தளபதி சிசில் வைத்தியரெட்னாவின் பதவி விலகலானது, சிறிலங்கா இராணுவ தலைமைப் பீடத்திற்குள் இருந்த முரண்பாடுகளைக் கணிசமான அளவில் குறைக்கும் என்றே கூற முடியும் அத்தோடு, இராணுவத்திற்கும் பாதுகாப்பு அமைச்சிற்கும் இடையிலான முரண்பாடுகள் தீர்க்கப்படலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. இது, அரசியல் மட்டத்திலும் இராணுவ மட்டத்திலும் நெருக்கமான உறவினை வளர்க்க வாய்ப்பாக இருக்கலாம்.

ஏனெனில், முன்னாள் தளபதி சிசில் வைத்தியரெட்னா, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்காவிற்கும் இடையில் இரண்டாம் கட்ட ஈழப்போர் தொடங்கிய காலத்தில் இருந்தே முரண்பாடுகள் இருந்து வந்தமை வெளிப்படையானது. இருவரும் போட்டியாளர்களாகவே செயற்பட்டனர். இது இராணுவத்தில், போட்டிக் குழுக்களையே உருவாக்கியிருந்தன

ஆனால், தற்போதைய இராணுவத் தளபதி லெப். ஜெனரல் ஜெரி டி சில்வாவிற்கும், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்காவிற்கும் இடையில் பரஸ்பரம் நல்லுறவு நிலவுவதினால் முரண்பாடுகள் குறைவதற்கான வாய்ப்புகள் அதிகமாகவே உள்ளது. எடுத்துக்காட்டாக சிசில் வைத்தியரெட்னா இராணுவத்தளபதியாக இருக்கும் வரை பெரிதாக வெளியில் எதையும் பேசாது இருந்த

## ஜெயராஜ்

பாதுகாப்புச் செயலாளர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா, தற்பொழுது இராணுவம் பற்றி வெளிப்படையாகப் பேச முற்பட்டுள்ளமையானது ஜெரிடி சில்வாவுடன் அவருக்குள்ள நெருக்கத்தையே காட்டுவதாகவுள்ளது.

ஆயினும், முற்றாக முரண்பாடுகள் களையப்பட்டுவிட்டதாகக் கொள்ளவும் முடியாது. இராணுவத்தின் பிரதம நிர்வாக அதிகாரியாகப் பொறுப்பேற்றுள்ள மேஜர் ஜெனரல் லக்கி அல்கம முன்னாள் இராணுவத்தளபதிக்கு நெருக்கமானவர் என்றநிலையில், முரண்பாடுகள் முற்றாகக் களையப்பட்டதாகவும் இல்லை இதற்குமேலுமொரு உதாரணமாக முன்னாள் இராணுவத்தளபதி சிபார்சு செய்த எட்டு பிரிகேடியர்களின் பதவி உயர்வுகளை ஜனாதிபதி ரத்துச் செய்துள்ளமையும் சுட்டிக் காட்டத் தக்கவையாகும்.

ஆனால் இம்முரண்பாடுகள் யாவற்றிற்கும் மேலாக யுத்தம் குறித்து அரசியல் தலைமையும் - இராணுவத் தலைமையும் கூட்டாகச் சிந்திப்பதினால் யுத்தம் என்பது இவ்வாண்டில் தவிர்க்க முடியாத ஒன்றாகவே இருக்கும் என எதிர்பார்க்கலாம். சில தினங்களுக்குமுன் வெளிநாட்டுச் செய்தியாளர் ஒருவருக்கு பேட்டியளித்த பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்க ''யுத்தமே எமது இறுதி முடிவு. நாம் யுத்தத்திற்கான சகல முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறோம். இதனை எமது ஜனாதிபதி சகலருக்கும் தெளிவாகக் கூறியுள்ளார்.'' எனத் தெரிவித்துள்ளதில் இருந்தே இவ் ஆண்டில் தமிழீழத்தில்பெரும் யுத்தங்கள் இடம்பெறலாம் எனக் கூறுவதில் தவறில்லை.

ஆனால், மேற்கூறப்பட்ட முயற்சிகள் யாவும் யுத்தத்தில் விடுதலைப்புலிகளை வெற்றி பெறவும், தமிழர் தேசிய இன போராட்டத்தை இராணுவ ரீதியில் எந்தளவிற்கு வெற்றி பெற உதவ முடியும்?

சிறிலங்கா இராணுவம் கடந்த பத்து வருடகாலத்தில் குறிப்பாக இரண்டாம் கட்ட ஈழப்போரில் கணிசமான சக்திவாய்ந்த ஆயுதத் தளபாடங்களை போர்முனையில் பயன் படுத்தியுள்ளது. இதில் சக்திவாய்ந்த டாங்கிகள், குண்டு வீச்சு விமானங்கள், பீரங்கிப்படகுகள் எனப் பட்டியல் நீண்டு கொண்டே செல்கின்றது. இவை யாவும் போர் வெற்றிக்குக் கணிசமாக உதவும் என்றே கருதப்பட்டது,

ஆயினும் போர் முனையில் அவை திறம்படச் செயற்பட்ட போதும் எதிர்பார்த்த வெற்றியை இராணுவத்திற்கு ஈட்டிக் கொடுக்கத் தவறிவிட்டன: மாறாக ''கவுண்டபொயின்ற்'' சஞ்சிகை குறிப்பிட்டதுபோல் ''யுத்தடாங்கிகளின் அறிமுகமானது படையினர் மத்தியில் தவறான அபிப்பிராயத்தையே தோற்றுவித்திருந்தது. இதனால் ஒப்பரேசன் யாழ்தேவியின் போது டாங்கிகள் விடுதலைப்புலிகளால் அழிக்கப்பட்ட போது படையினர் பதற்றமே அடைந்தனர். அதாவது இராணுவத்தின் மனத்தளர்ச்சிக்கே அவை உதவின.

இதே போன்றே சுப்பர் டோறா படகு பருத்தித்துறைக் கடலில் விடுதலைப் புலிகளால் மூழ்கடிக்கப்பட்ட போது கடற்படையினரின் நிலையும் இருந்தது. இப்படகு எவ்வாறு கடற்புலிகளால் வழி மறிக்கப்பட்டது என்பது அவர்களுக்கு இன்னமும் ஆச்சரியமானதாகவே உள்ளது.

இந்நிலையில் புதிய தளபாடக் கொள்வனவும், யுத்தத்தில் வெற்றி பெற எந்தளவிற்கு இராணுவத்திற்கு மனவுறுதியைக் கொடுக்க முடியும் என்பதும் வெற்றிக்கும் உதவ முடியும் என்பதும் கேள்விக்குரிய தொன்றாகவே இருக்கும்,

மேலும் விடுதலைப்புலிகளுக்கு எதிரான போரில் நீண்ட காலமாக தலைமை தாங்கிய தளபதியான ஹமில்டன் வனசிங்காவும், இரண்டாம் கட்ட ஈழப்போரில், மூன்றாவது நபராக இராணுவத் தளபதிப் பதவியைப் பொறுப்பேற்றுள்ள ஜெரிடி சில்வாவும் புதிதாக வகுக்கப் போகும் போர்த் தந்திரோபாயங்களில், எத்துணைபுதிய யுக்திகளைகாட்ட முடியும் என்பதிலும் சந்தேகங்கள் உண்டு. இவ்விருவருமே ஈழப் போரின் ஆரம்பம் முதல் விடுதலைப் புலிகளுக்கு எதிராகப் போர்முனையில் செயற்பட்டவர்கள். ஆனால், இவர்களால் கடந்த காலத்தில் வெற்றியை ஈட்டிக்கொடுக்க முடியவில்லை. இன்று போரின் பரிணாமமமே மாறியுள்ள நிலையில் மீண்டும் அவர்களால் எத்தகைய திறம்பட்ட செயற்பாட்டைக் காட்டமுடியும்?

அதாவது, இன்று சிறிலங்கா இராணுவம் விடுதலைப் புலிகளிடம் இருந்து மரபு வழிப் போர்முறையற்ற ஆனால், மரபு வழிப் போர்முறைக்குச் சமமான பாரிய தாக்குதல்களை எதிர்கொள்கின்றது. இந்நிலையில், புலிகளின் இவ்யுக்தியை ஈடுகட்டக்கூடிய புதிய போர் யுக்தியை வகுத்துக் கொள்ள வேண்டிய நிலையில் இராணுவத் தளபதிகள் உள்ளனர். ஆனால், புலிகளின் கடந்த காலப் போர் யுக்திகளைச் சமாளிக்க முடியாத இத் தளபதிகளால் புலிகளின் புதிய யுக்திகளைச் சமாளிக்க முடியுமா என்பதே கேள்வியாகும்.

மேலும், 1994 இல் இடம் பெறும் படை எடுப்புக்கள் மீதான புலிகளின் எதிர்த் தாக்குதல்கள் மற்றும் புலிகள் மேற்கொள்ளும் தாக்குதல்கள் என்பன மிகவும் கடினமானதாகவும், புதிய போர் யுத்திகளைக் கொண்டதாகவே இருக்கும் எனத் துணிந்து கூறலாம் இதனால், இராணுவம் எதிர் கொள்ள வேண்டிய இழப்புக்களும் அதிகமாகவே இருக்கும் என்பதிலும் சந்தேகமில்லை.

ஆனால், இவற்றை அரசாங்கமும் இராணுவத் தலைமையும் புரிந்து கொள்ளாமலும் இல்லை. இருப்பினும், சிறிலங்கா அரசு 1994 ஆம் ஆண்டை ஒரு போராண்டாகவே எதிர்கொள்ள விரும்புவதாகவே தெரிகின்றது.இதில்சிறிலங்கா அரசின் பேரினவாதச் சிந்தனையா? ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் வியூகமா ஏதாவது ஒன்று அல்லது இரண்டும் காரணமாக இருக்கலாம்.ஆனால்,இவ்வாண்டில் சிறிலங்கா அரசாங்கம் இராணுவத் தீர்விற்கு மேற்கொள்ளும் முயற்சியானது இனப் பிரச்சினைக்கு சமாதான ரீதியான அரசியல்தீர்வு என்பதையே கண்ணுக்கெட்டாத தொலைவிற்கு விரட்டிவிடும். ஏனெனில் மக்களுக்கு பேரழிவு ஏற்படுமானால் சமாதானப் பேச்சிற்கே இடமில்லை என்பதில் விடுதலைப் புலிகள் தெளிவான நிலைப்பாட்டைக் கொண்டிருப்பது தெரிகின்றது.அத்தோடு கடந்தகால அனுபவமும் புலிகள் இராணுவ மிரட்டல்களுக்கு எப்போதும்பணிவதில்லைஎன்பதையே காட்டுவதாகவும் உள்ளது.

## ஆசிரிய ஆலோசகர் கருத்தரங்கு

ஆசிரிய ஆலோசகர் கருத்தரங்கு நாளை சனிக்கிழமை கோப்பாய் மகா வித்தியாலயத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.30 வரை இடம் பெறவுள்ள இக்கருத்தரங்கிற்கு வடக்கு வலய ஆசிரிய ஆலோசகர்களும், விசேட உதவிக் கல்விப் பணிப்பாளர்களும் தவறாது சமுகமளிக்கும்படி கல்விப் பணிப்பாளர் க. கந்தசாமி கோருகின்றார்.

# சிறிலங்கா பொலிசாருக்கு மனித உரிமை கற்கைநெறி

## கட்டுக்குருந்தையில் வகுப்புகள்

(கொழும்பு)

பல பொலிஸ் உத்தியோகத்தர்கள் மனித உரிமைகள் மீறல்கள் தொடர்பாக உச்ச நீதிமன்றத்தினால் குற்றவாளிகளாகக் காணப்பட்டதையடுத்து பொலிஸ் திணைக்களம் மனித உரிமைகள் பற்றிய வகுப்புக்களை பொலிசாருக்கு நடத்தி வருகிறது.

மனித உரிமைகள் கற்கை நெறித் தொடரில் முதல் வகுப்பு கட்டுக்குருந்தை பொலிஸ் பயிற்சிக் கல்லூரியில் இடம்பெற்றது. மனித உரிமைகள் தொடர்பாகப் பல பாடங்களைமூத்த பொலிஸ் அதிகாரிகள் கற்பித்ததாகத் தெரியவருகிறது.

பொலிஸ் உத்தியோகத்தர்கள் மனித உரிமைகள் மீறல்களில் சம்பந்தப்படுவதால் பொலிஸ் மக்களிடமிருந்து மதிப்பை இழந்துவிடும் என்று உச்ச நீதிமன்று பொலிஸ் மனித உரிமை வழக்குகளில் பொலிஸ் திணைக்களத்தை எச்சரித்திருந்தது. அதனைத் தொடர்ந்தே புதிய பொலீஸ் மா அதிபர் பிராங் டி சில்வா இந்த வகுப்புகளை நடாத்தும்படி பணித்துள்ளார்.

# சூரியகந்த புதைகுழிகள் தோண்டும் பணி ஸ்தம்பிதம்

(கொழும்பு)

நீதிமன்றத் தீர்ப்பை தொடர்ந்து சூரியகந்த புதைகுழிகளை தோண்டும் பணி பாதிப்பு அடையக்கூடிய ஒரு நிலை ஏற்பட்டிருப்பதாக சப்பிரகமுவா மாகாணசபை உறுப்பினர் சுனித்திரா வன்னியாராச்சி சந்தேசிய வானொலிக்கு தெரிவித்துள்ளார்.

நீதிபதியின் தீர்ப்பை அடுத்து அப்பகுதி மக்களும் பொலிசாரும் இணைந்து இப் புதைகுழிப் பகுதிக்கு பாதுகாப்பு வழங்கினர் என்றும் ஆனால் நேற்றுக்காலை கிடைத்த பொலிஸ் அறிவுறுத்தலைத் தொடர்ந்து அப்பகுதி மக்கள் வழங்கிய பாதுகாப்பு விலக்கிக்கொள்ளப்பட்டதாகவும் தெரிவித்தார்.

பகுதியாகத் தோண்டப்பட்ட இப் புதைகுழிகள் குண்டர்களினால் அழிக்கப்படக்கூடிய ஆபத்து இருப்பதாக மேலும் அவர் தெரிவித்துள்ளார்.

### சாவகச்சேரியில்

மேற்படி தாக்குதலின் போது 7பேர் அந்தஇடத்தில் பலியானதும் 50பேருக்குமேல் படுகாயமடைந்து யாழ். போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்ததும் தெரிந்ததே.

இவருடன் சேர்த்து மரணமடைந்தோர் தொகை 11ஆக அதிகரித்துள்ளது.

### ஏழுமண்டை

விடுத்த அறிக்கையில், சவக்குழி சூரியகந்த பகுதியில் காணப்பட்டதாக செய்தி வெளியானதும் அப்பகுதிக்கு எம்பிலிப்பிட்டியநீதிபதி சென்றார் ஏழு மண்டை ஓடுகளும் சில எலும்புகளும் அங்கு மீட்கப்பட்டன. சில பத்திரிகைகள் கூறுவது போல்வேறு எதுவும் அங்கு காணப்படவில்லை

சனியன்று மீண்டும் தேடுதல் நடத்துவதாக நீதிபதி விசாரணையை ஒத்தி வைத்தார். பொலிசார் இப்பொழுது இப்பகுதியைக் காவல் செய்கின்றனர்.

கண்டெடுக்கப்பட்ட எலும்புக் கூடுகளை சட்ட வைத்தியர் பரிசோதனைக்காக கொழும்புக்கு அனுப்புமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளதாகவும் அதில் மேலும் தெரிவிக்கப்பட்டது.

### செல்லச்சாமி

கடத்திச்செல்லப்பட்டதாகவும் பின்னர் இடம்பெற்ற பேரம் பேசலின்போது இவ் உடன்பாடு ஏற்பட்டதாகவும் அதனையடுத்தே இவர்கள் இ.தொ.காவின் முடிவுக்கு எதிராக செயற்பட சம்மதித்ததாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது

இதேவேளை இ.தொ.கா. பொதுச் செயலாளரும் ராஜாங்க அமைச்சருமான எஸ். செல்லச்சாமிக்கு அமைச்சர் பதவி வழங்கப்படும் என உறுதியளிக்கப்பட்டுள்ளதாக வேறுசில செய்திகள் தெரிவிக்கின்றன.

### விறகு

வானூர்தி ஒன்று இடைவிடாது சில நிமிடங்கள் கலிபர்த் தாக்குதல்களை மேற்கொண்டது. அவ்வேளையில் பாதுகாப்புத்தேடி சைக்கிளில் இருந்து இறங்க முற்பட்டபோது கலிபர்ரவைபட்டு அவ்விருவரும் படுகாயமடைந்தனர். மரமொன்றினுள் மறைய முற்பட்ட போதும் கூட மீண்டும் இவர்கள் மீது நடாத்தப்பட்ட தாக்குதலினால் அவர்கள் காயமடைய நேர்ந்தது.

இச்சம்பவத்தில் வி. அரசரத்தினம்( வயது18 ) கோண்டாவில், எஸ். சிவரஞ்சன் (வயது19) உடுவில் ஆகியோரே படுகாயமடைந்தவர்களாவர். இவர்கள் சிகிச்சைக்கென யாழ் போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (பா)

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

**06 - 01 - 1994**

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 115

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கம் இல்லை

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்

24-5509, 26-2786, 26-8419, 28-4545, 40-2829 28-0854.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 81 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 07 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# ஆதாரம் காட்டி பெறவும்

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவு ஜே/7 பிரிவைச் சேர்ந்த ம. பிலிப்பையா என்பவரதும் பி. மரியதிரேசா என்பவரதும் உலர் உணவுக் கூப்பன்கள் வழியில் கண்டெடுக்கப்பட்டு வேலணை ப.நோ.கூ. சங்க தலைமைக் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இவற்றை உரியவர்கள் ஆதாரம் காட்டி காரியாலய நேரத்தில் பெற்றுக் கொள்ளுமாறு மேற்படி சங்கத்தின் பொது முகாமையாளர் தெரிவித்தார். (88)

# பூநகரி துறைப்பகுதியில் ஆணின் சடலம் மீட்பு

பூநகரி நல்லூர் இறங்கு துறையை அண்டிய பகுதியில் சடலம் ஒன்று உருக்குலைந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இச்சடலம் கடந்த 4ஆம் திகதி அன்று கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் வைக்கப்பட்டிருந்தது.

கடந்த 1-1-1994 அன்று இரவு பொதுமக்களின் உதவியுடன் தமிழீழ காவல் துறையினர் அச்சடலத்தை கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் ஒப்படைத்திருந்தனர்.

இச்சடலம் 40வயது மதிக்கத்தக்க ஓர் ஆணின் சடலமாகும். இதில் நீலநிற மேலங்கி காணப்பட்டது.

மேலும் இச்சடலத்தை அடையாளம் காண மக்களின் பார்வைக்கென கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைப் பிரேத அறையில் வைக்கப்பட்டிருந்தது.

### உடவளவ

டது. அப்பொழுதே இவ்வாறு மண்டையோடு மனித எலும்புகள் என்பனவும் பாவனைப் பொருள்களும் கண்டு பிடிக்கப்பட்டன.

உடவளவபகுதியில்இராணுவ வாகனம் ஒன்றுடன் வேறு இரு வாகனங்களில் மனித சடலங்கள் கொண்டுவரப்பட்டு இழுத்துச் செல்லப்பட்டதை தான்கண்டதாககிராமவாசி ஒருவர் தெரிவித்தார்

தனது உயிருக்கு அஞ்சியே தான் இதுவரை காலமும் தகவல் தெரிவிக்க வில்லை எனவும் இப் பொழுதும் தனது உயிருக்கு அச் சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகவும் தனக்கு பாதுகாப்புத் தருமாறும் அக்கிராமவாசி எம்பிலிப்பிட்டிய நீதிபதியை கோரியுள்ளார்.

இதேவேளை புதைகுழிகள் குறித்த சந்தேகம் எழுந்தால் அதுபற்றி தகவல் தருமாறு வாசுதேவ நாணயக்கார கோரியுள்ளார்.

அண்மையில் சூரியகந்த மலைப்பகுதியில் மனித புதைகுழியொன்று கண்டுபிடிக்கப்பட்ட விவகாரம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ள நிலையில் இப் புதைகுழி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதனால் தென்னிலங்கையில் ஜே. வி. பி. கிளர்ச்சிக் காலத்தில் அரசபடைகளால் கொன்று புதைக்கப்பட்ட பலரின் புதைகுழிகள் கண்டு பிடிக்கப்படலாம்எனதெரிவிக்கப்படுகிறது

# அவசரகாலச் சட்டத்தில் ஒரு சில திருத்தங்கள்

அவசரகாலச் சட்டத்தில் ஒருசில திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளத்தாக தெரிவிக்கப்படுகிறது. கடந்த டிசம்பர் 20ஆம் திகதி அமுலாக்கப்பட்ட அவசரகாலச் சட்டத்தை எதிர்க்கட்சிகள் குறைகூறியதை அடுத்து இந்தத் திருத்தம் செய்யப்பட்டுள்ளதாம்.

அரசுக்கும், ஜனாதிபதிக்கும் எதிராகஅதிருப்தியைஏற்படுத்தக் கூடியசிலசெயற்பாடுகள் அவசரகாலச் சட்டத்திலிருந்து நீக்கப்பட்டிருப்பதாக ஜனாதிபதி தரப்புப் பேச்சாளர் ஒருவர் கூறியுள்ளார்.

### பாடசாலை

அவதானிக்கமுடியும் எனவும், அதன் அடிப்படையில் குறைபாடுகள் ஏதாவது அவதானிக்கப்படின் பரிகார நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு பாடசாலைகளை ஒழுங்கமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது எனவும் கூறப்படுகிறது.

இது தொடர்பாக ஒவ்வொரு கோட்டத்திலும் ஆரம்ப நிலைப் பாடசாலைகள் எட்டும் இடைநிலைப் பாடசாலைகள் எட்டும் வலய உத்தியோகத்தர்களினால் மேற்பார்வை செய்யப்படும்.

ஏனைய பாடசாலைகள் கோட்ட உத்தியோகத்தர்களினால் மேற்பார்வை செய்யப்படவுள்ளன.

இதேவேளை வலயப் பாடசாலைகளில் அபிவிருத்தி நடவடிக்கைக்கு உள்ளாக்கப்பட வேண்டிய விடயம் குறித்து இனம் காண்பதற்கு மதிப்பீடுகளும் மேற்கொள்ளப்படவுள்ளன.

இவ்வாறு இனம்காணப்பட்ட பிரச்சினைகளை விடுவிப்பதற்கான செயற்திட்டங்கள் தீட்டப்பட்டு அடுத்த தவணைவிசேட பயிற்சித்திட்டங்களின் ஊடாகவும் செயற்திட்டநடைமுறைகளின் ஊடாகவும் கல்வியில் அபிவிருத்தி காண்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அறியப்படுகின்றது.

ஏப்ரல்விடுமுறையில்சேவைக் கல்வி விபரம் என ஒதுக்கி இனம்காணப்பட்ட பிரச்சினைகளை விடுவித்தல் தொடர்பான பயிற்சிகள் எல்லாப் பாடசாலைகளினதும் அதிபர், ஆசிரியர்களுக்கு அளிக்கப்படவுள்ளன. (பா)

### சிறிலங்கா

வட்டாரங்களை ஆதாரம் காட்டி ஐலன்ட் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இதில் 724பேர் கொல்லப்பட்டுள்ளனர் என்றும் ஏனையோர் காணாமற்போயுள்ளனர் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன் 1445 பேர் காயமடைந்துள்ளனர், இந்த ஆண்டு இரத்தம் தோய்ந்த ஆண்டாகும் என இராணுவ அதிகாரிகள் கூறியுள்ளனர்.

### புளிகள்

'ஐலன்ட்' பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்துள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

நாம் வலியச்சென்று முதலில் தாக்கும் நிலைப்பாட்டையே எடுக்கவேண்டும். நாம் விரைவாக வெற்றிகளைப் பெறுவதற்கு ஆட்சி அமைப்பு நோக்குடன் போரிடவேண்டும்.

நாம் பதுங்கு குழிகளுக்குள் நின்று எம்மைக் காத்துப் போரிடும்முறை புலிகளிடமிருந்து பிரதேசங்களை மீட்கும் முயற்சிகளை பின்தள்ளிவிடும்.

புலிகளிடமிருந்து பிரதேசங்களை மீட்கும் உணர்வு தலைமைத்துவத்திலிருந்து எல்லா மட்டங்களிலும் பேணப்படவேண்டும்.

மேலும், இந்த யுத்தத்தை வெல்வதற்கு தேசம் இராணுவத்தையே நம்பியிருக்கிறது. எனவே சேவையிலுள்ளஇராணுவத்தளபதியே இதற்கு பதிலளிக்கவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# மரண அறிவித்தல்கள்

## தாமு தம்பையா

(அளவெட்டி வடக்கு, அளவெட்டி)

அளவெட்டி வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், தற்போது மட்டுவில் தெற்கில் வசித்தவருமாகிய தாமு தம்பையா 1994-01-06 வியாழக்கிழமை காலமானார். அன்னார் கனகம்மாவின் அன்புக் கணவரும், லோகநாயகி, புஸ்பராணி, காலஞ்சென்ற கணேந்திரராசா, செல்வநாயகி, சிவயோகநாதன் (கனடா), தேவராசா (கனடா), பாலயோகினி (டென்மார்க்), சாந்தினி (அவுஸ்திரேலியா), உருத்திரன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜெயநாதன் (சிவநாதன் ரெக்ஸ்ரைல்ஸ்), காலஞ்சென்ற விக்கிரமசிங்கம் (வளர்மதி ஸ்ரோர்ஸ் உரிமையாளர்), முருகவேள், சுரேந்திரன் (கனடா), நடராசா (டென்மார்க்), சிவதேவன் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமனாரும், பார்த்தீபன், பகீரதன், சதீஸ் (கனடா), வளர்மதி, சதீபன், தேனுகா, துவாரகா, நிசாந்தன், கீர்த்தனா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 1994-01-06ஆம் திகதி மட்டுவில் தெற்கில் நடைபெற்றது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.
(7160)

தகவல்:
சி. ஜெயநாதன்
(மருமகன்)

## சிவநெறிச் செம்மல் ச. நமசிவாயம்

சாவகச்சேரி அம்பிகா டிஸ்பென்சரி உரிமையாளரும், திருமதி ந. புனிதவதியின் அன்புக் கணவரும், ந. இரவிகுமார், ந. சிவபாலன், ந. குருபரன்(மிரேஸ்), திருமதி ச. சிவகௌரி ஆகியோரின் அன்புத் தந்தையும், திரு ச. சந்திரமோகனின் மாமனாரும், ச. பைரவி. ச அருண் ஆகியோரின் அன்புப் பேரனாருமான சிவநெறிச் செம்மல் ச. நமசிவாயம் அவர்கள் நேற்றுமாலை காலமானார் என்பதை அறியத்தருகிறோம்.

தகவல்:
ந. இரவிகுமார்
அம்பிகா டிஸ்பென்சரி, சாவகச்சேரி,

(7167)